Koviloor Digital Library

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



kmm0955

அருவினை கெடுத்தாள அனல்தவழ் கரத்தாள!
அடியரை நினைத்தாளுவாய்
ஒருபதம் எடுத்தாள ஒருபதம் மிதித்தாடும்
உயர்தில்லை நடராசனே.

ஜனவரி 1986

Koviloor Digital Library

நன்றி அறிவிப்பு



எங்கள் பெற்ருேர் திரு. தி. கனகசபை செட்டியார் - திருமதி மரகதம் ஆச்சி அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 1-12-1985 அன்று நெற்குப்பையில் நடைபெற்றபோது நேரில் வந்து வாழ்த்திய பெரியோர்கள், சான்ருேர்கள், தொழிலதிபர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் தந்தி, தபால் மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய சான்ருேர்களுக்கும் கவியரங்கத்தில் பங்கு பெற்ற கவிஞர்களுக்கும் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்களுக்கும் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்திய K. வீரமணி இராதா அவர்களுக்கும் மற்றும் மணி விழாவில் பங்கு பெற்ற அனைவருக்கும் எங்கள் உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

மணி விழாச் சிறப்புடன் நடைபெற எல்லா வகையாலும் உதவிய அன்பர்களுக்கும் மற்றும் எங்கள் நிறுவன ஊழியர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

க. தியாகராஜன் B. Com., A. C. A.,

க. முத்துப்பழநியப்பன் B. Com., B.L.,

ந. பழ. மு. ந. தி. இல்லம், நெற்குப்பை

Koviloor Digital Library

101

உ

சிவமயம்



நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 4

ஒலி 12

குரோதன

மார்கழி

ஜனவரி

1986

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

—அப்பர் சுவாமிகள்

கௌரவ ஆசிரியர் :

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர் :

வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர் :

சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625 001.

தொலைபேசி : p. p. 26668



தனி இதழ் ரூ 1-25 ❖ ஆண்டுச் சந்தா ரூ. 15-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை

காளையர்கள் வாழ்வுயர வேலை



101

Koviloor Digital Library

பழநி வழிநடைப் பயண விவரம்

18-1-86 குரோதன வு தை மீ 5உ (சனி) அவரவர் ஊர்களிலிருந்து குன்றக்குடி வந்து சேருதல்.

19-1-86 தை மீ 6 உ (ஞாயிறு) குன்றக்குடியிலிருந்து காலை புறப்படுதல். பகல்—கண்டவராயன்பட்டி; இரவு-மருதுப்பட்டித் தோப்பு.

20-1-86 தை மீ 7உ (திங்கள்) காலை - சிங்கம்புணரி; பகல்—மணப்பச்சேரி; இரவு-சமுத்திராபட்டி.

21-1-86 தை மீ 8உ (செவ்வாய்) காலை-நத்தம்; பகல்-உப்பாறு; இரவு-இடைச்சி மடம்.

22-1-86 தை மீ 9உ (புதன்) காலை—திண்டுக்கல்; பகல்—ரெட்டியார் சத்திரம்; இரவு-நகரத்தார் ஊருணி என்கிற செம்மடைப் பட்டி.

23-1-86 தை மீ 10 உ (வியாழன்) காலை-செம்மடைப்பட்டி; பகல்-குழந்தைவேலன் சந்நிதி; இரவு-அடையாள வேல் தரிசனம்.

24-1-86 தை மீ 11 உ (வெள்ளி) காலை-ஆயக்குடி; பகல்-இடும்பன் குளம் இரவு-பழநி அன்னதான மடத்தில் முதல் நாள் பூஜை.

25-1-86 தை மீ 12உ (சனி) தைப்பூசம். அன்னதானமடத்தில் இரண்டாம் நாள் பூஜை.


26-1-86 தை மீ 13உ (ஞாயிறு) அன்னதான மடத்தில் மூன்றும் நாள் பூஜை.

27-1-86 தை மீ 14உ (திங்கள்) **மகம்** அன்னதான மடத்தில் நான்காம் நாள் பூஜை. இன்று பகல் 2 மணிக்கு மேல் காவடி செலுத்துதல்.



உமா
டிரேட் லிங்க்ஸ்
264-A மேல மாசி வீதி
மதுரை-625 001
போன் ; 33367

Koviloor Digital Library



செய்திகள் வாசிப்பது....

எல். சுந்தரம்

ஃ தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியின் முதல்வர் என் சீனிவாசன் அவர்களின் புதல்வி எஸ் தமிழ்ச் செல்வி மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் 1985 பி. ஏ (பொருளாதாரம்) தேர்வில் 83.5 % மதிப்பு எண்கள் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

ஃ மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் மதுரை நகரத்தார் சங்கத்திற்கு ஒதுக்கப் பெற்ற ஆலயத் தூய்மை பராமரிப்புப்பணி ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 16 தேதிகளில் காலை 7-00மணி முதல் 9-00மணி வரை நடைபெற்று வருகிறது.

ஃ நம்மினத்தாரை மையமாகக் கொண்டு காவடிகளின் சிறப்புக்களை விளக்கும் விதமாக 'ஞானக் காவடி' என்றதொரு நூலை கோயமுத்தூர் சக்தி நிறுவனம் தயாரித்து வருகிறது இதன் ஆசிரியர் புலவர் திரு. ஞால ஒளியன் ஆவார்.

ஃ ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் உயர் பதவி வகித்த அமரர் நாக. முத்தையா அவர்கள் குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை எழுதியவர்கள்

ஃ 'ரூபீஸ் ஆஃப் விஸ்டம்' என்ற ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பாக 'நலலுரை வெண்பா' என்ற நல்ல நூலைப் படைத்தவர் கவிஞர் திரு ரெ. முத்துக்கணேசன் ஆவார். இவரது 'முத்தொள்ளாயிரப' மற்றொரு சிறந்த படைப்பாகும்.

ஃ மகாத்மா காந்தி பாகனேரி வந்தபோது புதுவளவில் உள்ள மு. நா. மு சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தார்.

ஃ ஆயிரத்தொரு இரவுகள், தெனாலிராமன் கதைகள் என்ற வரிசையில் கதைகள் எழுதிப் புகழ் பெற்றவர்கள் திரு அ. லெ. நடராசன், திரு அரு. இராமநாதன் திரு முல்லை முத்தையா ஆவார்கள்.

ஃ காரைக்குடியில் தி. நாராயணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'வாரச் செய்தி' என்ற நம்மினச் செய்திகள் மிகுதியாகக் கொண்ட பத்திரிகை முன்பு வெளிவந்தது.

ஃ பொள்ளாச்சி நகரில் 15-12-85 அன்று பொள்ளாச்சி நகரத்தார் முன்னேற்ற சங்கம் தொடங்கப் பெற்றுள்ளது.

ஃ பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற ஆய்வு நூலை எழுதி டாக்டர் பட்டம் பெற்றவாகள்.

ஃ கம்பன் படத்தை ஓவிய உருவில் கொண்டு வந்த பெருமை 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசனாரைச் சாரும்.

ஃ பாலர் மலர், டமாரம், சங்கு, பூஞ்சோலை ஆகிய பத்திரிகைகளுக்குக் கௌரவ ஆசிரியராக இருந்துள்ள 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள் இப்போது 'கோகுலம்' பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக இருந்து வருகிறார்கள்.

Koviloor Digital Library

சாரணர் விருது பெற்ற கண்ணபிரான்

திரு. கண்ணபிரான், பாகனேரி திரு இராம. அண்ணாமலை செட்டியார்–திருமதி சரோஜா ஆச்சியின் புதல்வர். வயிரவன் கோயிலில் பெரிய வகுப்பைச் சேர்ந்தவர். இவர் மதுரை நாகமலை புதுக்கோட்டை ஜெயராஜ் நாடார் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார்.

இவர் சாரண இயக்கத்தில் சேர்ந்து 16-1-85 முதல் 26-1-85 வரை கோவாவில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் கலந்து கொண்டார். இதில் ஒவ்



வொரு மாநிலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சாரணர்களில் இவரும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது சிறப்பிற்குரியது.

மேலும் 3—11—85 முதல் 7—11—85 வரை புதுடில்லியில் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, ராஷ்ட்ரபதி பவனில் நமது குடியரசுத் தலைவர் மேதகு கியானி ஜைல் சிங் அவர்களிடம் 'ஜனதிபதி சாரணர் விருது' பெற்று வந்துள்ளார்.

இவர், செல்வி பாலகவிதை அண. கவிதாராணியின் சகோதரர் ஆவார்.

மதுரையில் மாதர் சங்கக் கூட்டம்

மதுரை வாழ் நகரத்தாரின் மாதர் சங்கக் கூட்டம் ஒவ்வொரு தமிழ் மாதமும், முதல் சனிக்கிழமையன்று நடைபெற்று வருகிறது.

இச்சங்கத்தின் 5 ஆவது கூட்டம் 21-12-85 அன்று மதுரை செல்லூரில் உள்ள திருமதி இராம. அடைக்கம்மை ஆச்சி அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அண்மையில் வெளிநாடுகள் சென்று திரும்பிய பாத்திமாக் கல்லூரிப் பேராசிரியை திருமதி சி. எஸ். விசாலாட்சி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்கள்.

புதுவயலில் கந்தர் சஷ்டி விழா

புதுவயல் கந்தர்சஷ்டி விழாக் குழுவின் சார்பில் ஒன்பதாம் ஆண்டு சஷ்டி விழா, புதுவயல் அருள்மிகு கைலாச விநாயகர் கோயிலில் 12-11-85 முதல் 18-11-85 முடிய 7 நாட்கள் நடைபெற்றன, முதல் இருதினங்களில் காப்பியக் கவிஞர் திரு நா. மீனவன் இலக்கியப் பேருரை நிகழ்த்தினர். பின் 5 தினங்களில் பாடுவார் முத்தப்பர் வழி வந்த காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு நா. சுப்பிரமணியன் இலக்கியப் பேருரை நிகழ்த்தினர்.

Koviloor Digital Library

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

இலங்கையில் அற நிலையத் துறை அமைச்சராக மாண்புமிகு ராஜதுரை அவர்கள் இருந்தார்கள். உலகத் தமிழர் மாநாட்டின் போது நமது அற நிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களோடு அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்திலேயே ஒரு நிகழ்ச்சியில் அவர்களும் கலந்து கொண்டார்கள், அவர்கள் எப்போது இந்தியாவிற்கு வந்தாலும் அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வந்து அம்மனை வழிபட்டுச் செல்வதுண்டு. அவர்களுடைய பெருமுயற்சியில் இலங்கையில் இந்து சமய மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அரசு சார்பில் என்னையும் அழைத்திருந்தார்கள். நானும் என் மனைவி, மகள், மகன் ஆகிய நால்வரும் சென்றிருந்தோம். மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து பல அறிஞர் பெருமக்களும் வந்திருந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்பு நான் பார்த்த இலங்கைக்கும், இப்போது பார்த்த இலங்கைக்கும் வித்தியாசம் அதிகம் இருந்தது வெளிநாட்டுக் கார்களைத் தான் அதிகம் பார்க்க முடிந்ததே தவிர, வியாபாரங்கள் எல்லாம் க்ஷீண நிலையில் இருந்தன.

எங்களுக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்குவதற்கு இடம் தந்திருந்தார்கள். சாப்பாடு எல்லாவற்றிலும் தேங்காய் எண்ணெய் வாடையே இருந்ததால் ரொட்டித் துண்டுகளைச் சாப்பிடும் நிலையே இருந்தது. முன்பு நான் இலங்கைக்குச் சென்றிருந்தபோது அங்கு நகரத்தார்கள் அதிகம் இருந்தார்கள். தற்போது நகரத்தார்களைக் காண வேண்டும் என்ற ஆவலில் செட்டித் தெருவிற்குச் சென்றேன். இரண்டு கிட்டங்கிகளில் ஐந்தாறு பேர்கள்தான் இருந்தார்கள். ஒரு கிட்டங்கிக்குள் நுழைந்தேன். அங்கு ஒரு கடையினுடைய மேலாளர் கணக்கெழுதிக் கொண்டிருந்தார். அவரிடம் என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். உடனே அவர் '' என் பெயர் முருகையா. எங்கள் முதலாளி எம். சிஎன் மாணிக்கம்



திரு எம். சிஎன். மாணிக்கம்

Koviloor Digital Library

செட்டியார் அவர்கள் இந்து சமய மாநாட்டிற்குத் தாங்கள் வருவதாகக் கேள்விப்பட்டு தங்களை அழைத்து வருவதற்காக இப்போதுதான் வெளியில் புறப்பட்டுச் சென்ருர்கள், அவர்களை உடனே அழைத்து வருகிறேன்'' என்று சொல்லி ஓடோடிச் சென்று அழைத்து வந்தார். உள்ளே வந்ததும் மாணிக்கம் அவர்கள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு ''தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் இலங்கையில் இருக்கும் வரை என்னுடைய விருந்தினராகத்தான் இருக்க வேண்டும்'' என்று அன்புக் கட்டளையிட்டார்கள். மாணிக்கம் அவர்களை நான் அப்போதுதான் முதன் முதலாகச் சந்தித்தேன். அவர்களது கனிந்த பார்வை, சிரித்த முகம், உபசரித்த விதம், பணிவு, பாசம் அத்தனையும் சேர்ந்து என்னை அவர்களோடு ஈர்த்துக் கொண்டதோடு மட்டுமல்லாது ஒரு சகோதரனைப் பெற்ற உணர்வும் பெற்றேன். பிற்காலத்தில் நகரத்தார்களுக்கு மிகவும் பயன்படத்தக்க ஒரு இளைஞராக அவர் வருவார் என்று அன்றே நினைத்தேன். அந்த நினைப்பு தற்போது பலித்து வருவதை உணர்கிறேன். பிறகு நாங்கள் இலங்கையில் இருந்த ஐந்து நாட்களும் எங்களுடனேயே இருந்து பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் சுற்றிக் காண்பித்து தினமும் விருந்து வைத்து அங்கிருந்த நகரத்தார்கள் அனைவரையும் அழைத்து ஆலயத்தில் ஒரு வரவேற்பும் கொடுத்து பெருமைப் படுத்தினுர்கள்.

அவர்களுடைய மேல்ாளர் முருகையா அவர்கள் கடையில் முப்பதாண்டுக் காலமாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். மிகுந்த நாணயத்தோடு மாணிக்கம் அவர்களிடத்திலும் மற்றும் அவர்களது சகோதரர்களிடத்திலும் பணி புரிந்து வருகிருர்கள் ''எங்கள் முதலாளி சின்ன நாச்சியப்ப செட்டியார் அவர்கள் ஒரு வள்ளல். யார் வந்தாலும் விருந்தோம்பல் செய்வார்கள். வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். பிள்ளைகளும் வியாபாரத்தில் அதேபோல் இருப்பதோடு தம்பி மாணிக்கமும் விருந்தோம்பலில் அப்படியே பெரிய முதலாளிபோல் இருக்கின்ருர்கள்'' என்று சொன்ஞர். தொழிலாளியும் முதலாளியும் இப்படி இருந்தால் கம்யூனிசத்திற்கு வேலையே இல்லை. தம்பி மாணிக்கம் அவர்கள் ''உங்களுக்கு என்னை இன்றுதான் தெரியும். ஆனல், எனக்கு உங்களை முன்பே தெரியும்'' என்று சொன்னதோடு ''சபரிமலை செல்லும்போது தங்கள் இல்லத்திற்கே வந்திருக்கிறேன்'' என்று கூறினர்.

தேங்காய் எண்ணெய்க்குப் பயந்து ரொட்டி சாப்பிட்டுக் கொண்டிருந்த எனக்கு தம்பி மாணிக்கம் அவர்கள் வைத்த விருந்தில் இரண்டு பவுண்டு எடை கூடி இந்தியாவிற்குத் திரும்பினேன்.

மதுரையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நகரத்தார் இளைஞர் சங்கம் தொடங்கியதில் மாணிக்கம் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அதன் உதவித் தலைவராகப் பணியாற்றியதோடு மட்டுமல்லாது நடந்து வருகிற நகரத்தார் சங்கத்தின் செயலாளராகவும் சீரிய பணியாற்றி வருகிருர்கள்.

லெ நாராயணன் செட்டியார் அவர்கள் அருள்மிகு மீனுட்சி அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது கண்டரமாணிக்கத்தில் நகரத்தார்கள் வரவேற்புக் கொடுத்தபோது பெரும்பங்கு எடுத்துக் கொண்டவர்கள் மாணிக்கம் அவர்களின் தந்தையார் சின்ன நாச்சியப்ப செட்டியார் அவர்கள் அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் தலைவரான எனக்கு இலங்கையில் நக

Koviloor Digital Library



உங்கள் குரல்

டிசம்பர் இதழ் மிக நன்று. பிள்ளையார்பட்டியில் நடைபெற்ற கூட்டுத் திருமணங்கள் மிக நல்ல ஏற்பாடு. முன்னின்று நடத்திய திருச்சி நகரத்தார் சங்கத்திற்கு எனது பாராட்டுக்கள். இம் மாதிரிச் சிக்கனமான திருமணங்களை மற்ற நகரத்தார் சங்கங்களும் நடத்த வேண்டும் என விரும்புகிறேன்.

ஏ. சொக்கலிங்கம்

கவியரசரைப் பற்றிய வள்ளியப்பாவின் கட்டுரையோ அருமை; தமிழண்ணலின் பேட்டியோ வாய்மை; பிள்ளையார்பட்டிக் கூட்டுத் திருமணங்களோ திறமை; நம் இனத்திற்கோ இது பெருமை; நகரத்தார் குரல் வாழிய வாழியவே.

சா. வ. சிதம்பரம்

காளையார்மங்கலம்

தமிழண்ணல் என்னும் அறிவுப் பெட்டகத்தைத் திறந்து வைத்த 'எல்லெஸ்' அவர்களுக்கு நன்றி. உட்பொருள் எல்லாமே உள்ளம் கவர் உயர் ஓவியங்கள்; வாசகர் மனதை வளைத்திட்ட வளர் காவியங்கள்! அதுமட்டுமல்ல, திறந்தவரோ தங்கச் சாவி; அவர் வாசகர் மனதில் தங்கும் சாவி!

பாலகவிதை அண. கவிதாராணி (எம் ஏ.)

மதுரை

டிசம்பர் இதழில் டாக்டர் தமிழண்ணல் அவர்களின் பேட்டியைப் படித்தேன். 'எல்லெஸ்' அவர்களின் விடாமுயற்சியின் பலனுகக் கிடைத்த சிறு வரலாறு அது! பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் தமிழ்ப் பணிச் செம்மலை அறிஞர் திலகத்தை தமிழ்க் குரவர் நால்வருடன் இணைத்து ஐந்தாம் தமிழ்க் குரவராக எண்ணிப் பெருமை கொள்வோம்.

—எவர்பிரைட் நாச்சியப்பர்

மதுரை.

'கம்ப்யூட்டரும் அதன் பயன்களும்' கட்டுரை மிகவும் அருமை. நிறைய விஷயங்களைத் தெரிந்து அறிவைப் பெருக்கிக் கொண்டோம். டாக்டர் சோமலெ அவர்களிடமிருந்து இன்னும் நல்ல கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம்.

அரு. சோம. சண்முகநாதன்

உலகம்பட்டி

கம்ப்யூட்டர் பற்றிய கட்டுரையைப் படித்த எனக்கு அதை இயக்கியதுபோல் இருந்தது.

பி. தண்டபாணி

மதுரை

ஐயப்பனின் அட்டைப் படம் அருமை. கூட்டுத் திருமணங்கள்

ரத்தார்கள் அளித்த வரவேற்பில் சின்ன நாச்சியப்ப செட்டியார் அவர்கள் மகன் மாணிக்கம் அவர்களுக்குப் பெரும் பங்கு இருந்தது. தந்தை வகுத்துக் கொடுத்த பாதையில் மகனும் சென்ருர். இதேபோல மாணிக்கம் அவர்கள் நகரத்தார்கள் பலருக்கும் தேவையான உதவிகளை மனமகிழ்ச்சியோடு செய்து வருகிருர்கள். மாணிக்கம் அவர்களைப் போல் இளைஞர்கள் பெருகினுல் நகரத்தார் சமூகம் செழிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(வளரும்)

Koviloor Digital Library

பற்றிய கட்டுரையும் புகைப்படங்களும் சூப்பர்.

கே. இராமகிருஷ்ணன் எம். ஏ.
ஆத்தன்குடி

கம்ப்யூட்டர் பற்றிய கட்டுரை நன்ருக இருந்தது. சோமலெ அவர்களின் கடிதத்தைக் கண்டிப்பாக அனைத்துப் பெற்ருேர்களும் படித்துத் தங்கள் பிள்ளைகளின் எதிர் கால வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும்.

கோனுபட்டு நாராயணன்
கிருஷ்ணகிரி

பல நல்ல செய்திகளை உடனுக்குடன் வெளியிடும் 'நகரத்தார் குரலு'க்கு எனது பாராட்டுக்கள்.

ஆர்எம். நல்லப்பன்
தஞ்சாவூர்

முக்குறுணி மோதகம் பற்றிய செய்தியை அளித்த 'எல்லெஸ்' அவர்களுக்கு நன்றி. தாலாட்டுப் பாடல்கள் அருமை.

கே. ஆர். வைத்தியநாதன்
நாட்டரசன்கோட்டை

டிசம்பர் 'நகரத்தார் குர'லில் ஒன்று விடாமல் படித்தேன். 'சிந்தனை செய்மனமே' சிந்திக்கச் செய்தது. 'சுகமளிக்கும் நந்தவனம்' தாலாட்டு என்னை நந்தவனத்தில் சுகமாக உலவச் செய்தது. நகரத்தார் குரலைப் படித்ததன் மூலம் ஒன்று புரிந்து கொண்டேன் எதிர் காலத்தில் நானும் ஒரு சிறந்த ஆச்சியாக வருவேன் என்று.

செல்வி முரு. முத்துநாகம்மை
கடலூர்

காளையார் கோவிலில் தேவாரக் கல்லூரி

காளையார் கோவிலில் தவராஜர் செல்லப்ப சுவாமிகளின் நினைவாக செல்லப்ப சுவாமிகள் தேவாரக் கல்லூரி அறக் கட்டளை மூலம் தேவாரக் கல்லூரி ஒன்று, வரும் கல்வி ஆண்டில் தொடங்கப்பட இருக்கிறது. 10 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படவிருக்கும் இதில் மாணவர்களுக்குத் தேவாரம், சங்கீதம், தமிழ், சமயம், சமஸ்கிருதம் ஆகியவை கற்றுக்கொடுக்கப்படும் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற குரல் வளமுடைய மாணவர்களுக்கு இலவச உணவு, உறைவிடம் அளித்து 5 ஆண்டுக் காலம் பயிற்சியளிக்கப்படும்.

இதன் தலைவராக காளையார் கோவில் கா. செ. வேதாந்த மடாலயத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ இராஜாராம் சுவாமிகளும் செயலாளராக தேவகோட்டை ஏ எல். ஏ ஆர். எஸ் எம் நாராயணன் செட்டியார் அவர்களும் பொறுப் பேற்றுள்ளனர்.

பிரதிநிதி நியமனம்

நமது "நகரத்தார் குரல்" இதழுக்கு உறுப்பினர்களைச் சேர்க்கவும் விளம்பரங்கள் சேகரிக்கவும் மற்றும் தேவையான உதவிகளைச் செய்து உதவவும் கீழ்க்கண்ட முகவரிதாரரை 1–12–85 முதல் கௌரவப் பிரதிநிதியாக நியமனம் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம். சிவகங்கைப் பகுதியில் உள்ளவர்கள் அன்னாருக்கு தங்களது ஆதரவினை நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிருேம்.

சிவகங்கை மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளுக்கு :

திரு O. சிங்காரம்
மீனுட்சி ஆட்டோ ஸ்டோர்ஸ்
117, அரண்மனை வாசல்
சிவகங்கை – 623 560

Koviloor Digital Library

'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன்

கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் புதுவயலில் பிறந்து தேவகோட்டைக்குச் சுவீகாரம் சென்றவர். வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர் 49 வயது இளைஞர்; நல்ல அறிஞர்; கலகலப்பாகப் பேசக் கூடியவர்; திட்டமிட்டுச் செயலாற்றுபவர்.

கல்வி

இவர் தொடக்க கல்வியைப் புதுவயலிலும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியைக் கண்டனூரிலும் கல்லூரிக் கல்வியைக் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் பயின்று B. A., பட்டம் பெற்றார். பின் தனியாகப் படித்து M. A., (தமிழ்) தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்று மாநில இரண்டாம் பரிசு பெற்றார்

1957 மார்ச் B. A. தேர்வில் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவராகத் தேறி ஜி யு. போப் தங்கப் பதக்கத்தை அப்போதைய மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ண மேனனிடமிருந்து பெற்ற பெருமைக்குரியவர் இவர்.

முதல் கவிதை

இவர் பள்ளி இறுதி வகுப்பில் படித்தபோது (1953ல்) தனது முதல் கவிதையினைத் தன்னை ஆதரித்த வள்ளல் கண்டனூர் வீ. தெ. வீரப்ப செட்டியார் அவர்களைப் பற்றி இயற்றினார்.

பணிகள்

கவிஞர் திரு அரு. சோ. ''தமிழ்நாடு'' நாளிதழில் துணை ஆசிரியராக, பாங்க் ஆஃப் மதுரையில் எழுத்தராகச் சில மாதங்கள் பணியாற்றியிருக்கிறார். பின் 1950 ஜூன் முதல் நான்காண்டுகள் திருவாரூர், தேவகோட்டையில் தமிழாசிரியராகவும் 1963 ஜூன் முதல் நான்காண்டுகள் சண்முகநாதபுரம் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். 1967 ஜூனில் காரைக்குடியில் செட்டிநாடு தனிப் பயிற்சிக் கல்லூரியை ஏற்படுத்தி அதில் முதல்வராக 7 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

பட்டங்கள்

1961ல் கோயிலூர் வேதாந்த சபையின் சார்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கவிஞருக்குப் 'பல்துறை செந்நாப் பாவலர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்.



1972ல் பறம்புமலைப் பாரி விழாவில் கவிஞருக்கு 'கவிஞர் கோ' என்னும் பட்டத்தினை தவத்திரு அடிகளார் அவர்கள் வழங்க அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

பொற்கிழிப் பரிசு

1972 மே யில் தமிழக அரசின் சார்பில் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் நடத்திய பொற்கிழிக் காவியப்

Koviloor Digital Library

போட்டியில் கவிஞர் பங்கு பெற்று ''பாண்டிமா தேவி'' காவியம் எழுதி பொற்கிழி பெற்று இருப தாம் நூற்றுண்டின் முதல் பொற் கிழிக் கவிஞர் ஆனுர்.

நூல்கள்

கவிஞர் திரு. அரு சோ. கவிதை, கட்டுரை, காவியம், நாடகம், பயணம், சரித்திரம் வாழ்க்கை வரலாறு, மொழி. பெயர்ப்பு, இலக்கியத் திறனய்வு என்று இதுவரை 100க்கும் மேற் பட்ட நூல்களை தனது ''பொன் முடி பதிப்பகம்'' மூலமாக வெளி யிட்டுள்ளார் கவிஞரது 5,000க் கும் மேற்பட்ட கவிதைகள் 17 தொகுப்புகளாக வெளி வந்துள் ளன.

சுற்றுப் பயணம்

கவிஞர் இந்தியா முழுவதும் (1972, 1973, 1974, 1979 ஆம் ஆண்டுகளில்) நான்கு முறை சுற் றுப் பயணம் சென்று வந்துள் ளார். எஞ்சியுள்ள உலக நாடுகள் அனைத்திலும் சுற்றுப் பயணம் செய்ய ஆவல் மிகக் கொண்டுள் ளார்.

பேட்டி: எல். சுந்தரம்

மொழி பெயர்ப்பு

உலகத்தின் மிகப் பெரிய நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரின் நூல்கள் முழுவதையும் மொழி பெயர்த்து வெளியிடும் முயற்சி யில் உள்ள கவிஞர், இதுவரை 11 நூல்களை மொழி பெயர்த்து வெளி யிட்டுள்ளார். எஞ்சியுள்ளவற் றைப் படிப்படியாக வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

பாதயாத்திரை

கவிஞர் திரு. அரு. சோ. 1977ல் தேவகோட்டையிலிருந்து முதன் முறையாகத் திருச்செந்தூ ருக்குத் தன் மனைவி திருமதி நீலா ஆச்சியுடனும் மற்றும் சில அன் பர்களுடனும் பாத யாத்திரை மேற்கொண்டார், ஓராண்டுக் காலத்தில் இவரும் இவரது துணை வியாரும் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுக்குத் தேவ கோட்டையிலிருந்து பாத யாத்தி ரையாகச் சுமார் ஆயிரம் மைல் கள் சென்று வழிபட்டனர்.


'' இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்ற தன் மூலம் சாதனை நிகழ்த்திய உங்களது அந்தப் புனிதப் பய ணத்தின் அனுபவங்கள் பற்றிக் கொஞ்சம் சொல்லலாமா?'' என்று கேட்டபோது—

'' அப்பர், சுந்தரர், சம்பந் தர், மாணிக்கவாசகர், காரைக் காலம்மையார் போன்ற பெரி யோர்கள் அந்தக் காலத்தில் பாத யாத்திரை சென்றுள்ளனர். நக்கீ ரர் திருமுருகாற்றுப்படையில் ''செலவு நீ நயந்தனை ஆயின் இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'' என்று பாடியிருக்கி ருர். 'செலவு' என்பதற்கு 'நடந்து செல்லுதல்' என்று பொருளாகும்.''

'' காசி முதல் குமரி வரை உனது எல்லையே; கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே '' என்று திருச்செந்தூர்ப் பாதயாத் திரையின் போது பாடிய பாடல் தான் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாத யாத்திரை செல லத் தூண்டுகோலாக அமைந்தது. பாதயாத்திரையில்தான் ஆன் மீகத்தை உணர முடிகிறது.''

'' நானும் மற்றும் நண்பர் கள் 11 பேரும் இராமேஸ்வரத்தி லிருந்து காசிக்குப் பாதயாத்திரை செல்வது என்று முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளுடன் 16-2-83ல் இராமேசுவரம் சென்று கடலில் நீராடித் தீர்த்தங்கள் ஆடி இராமநாதரையும் இறைவியையும் வணங்கி கோடித்தீர்த்தமும் கடல் மண்ணும் சேகரித்துக் கொண்டு 17-2-83 அன்று அங்கிருந்து

Koviloor Digital Library



சென்னை சத்தியமூர்த்தி பவனில் 14-11-1965 அன்று காமராஜ் அவர்கள் கவிஞர் அரு சோ. வின் '' திருமுறைகள் வீட்டு நூல் '' புத்தகத்தை வெளியிட்ட காட்சி. அருகே காங்கிரஸ் தலைவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு இருக்கிறார்.

புறப்பட்டோம். தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் 116 நாட்களில் சுமார் 2000 மைல்கள் பாதயாத்திரையாகப் பயணம் செய்து 12-6-83 அன்று நலமுடன் காசி போய்ச் சேர்ந்தோம். கடல் மண்ணை அங்கு கங்கையில் கரைத்தோம். பாதயாத்திரையின்போது 40க்கும் மேற்பட்ட புண்ணிய நதிகளில் நீராடினோம். உத்தரப் பிரதேச அரசு காசி விஸ்வநாதர் கோயிலில் எங்களுக்குப் பூரண கும்ப மரியாதை அளித்து அரசு சார்பில் 'காசிஸ்ரீ' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.''

''நாங்கள் பாதயாத்திரைக்குப் பயன்படுத்திய சைக்கிள் ரிக்ஷாவை வேந்தன்பட்டி பழநியப்பன் இராமசாமி அவர்கள் நன்கொடையாக வழங்கினார்கள். எங்கள் பாதயாத்திரைப் பயணம் முடிந்ததும் அதை நாங்கள் காசி நகர விடுதி மானேஜர் மூலம் ரூ.5,000க்கு விற்று அப்பணத்தில் ரூ. 4 500- ஐ திருச்செந்தூர் பாதயாத்திரைக் குழுவினருக்கும் ரூ. 500- ஐ திருத்தணி பாதயாத்திரைக் குழுவினருக்கும் நிரந்தர நிதி வகைக்காக வழங்கியுள்ளோம்.''

''ஆக இந்தப் பாதயாத்திரை ஒரு மறக்க முடியாத சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அனுபவமாகும்'' என்று கூறினார்.

கவிஞர் திரு. அரு. சோ. 18 ஆண்டுகளாகக் காரைக்குடி அரிமா சங்க உறுப்பினர். 1984-ல் அதன் தலைவரானார். துலாவூர் மடாலய ஆதீனகர்த்தர் பால உதய மூர்த்தி தேசிகரின் சதாபிஷேகத்தைச் சென்ற ஆண்டு சிறப்பாக நடத்திவைத்தார். இப்போது மேற்படி ஆதீனத்தின் நிரந்தர நிதிச் செயலாளராக இருக்கிறார்.

Koviloor Digital Library

நல்ல பண்பாளர். சகலகலாவல் லவர்,

கவிஞரிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தபோது "திட்டமிட்டுச் செயலாற்றும் எந்தச் செயலும் வெற்றியைத் தரும். நாம் சொல்வதைச் செய்ய வேண்டும்; செய்வதைச் சொல்ல வேண்டும்." என்று கூறினர்.

'நல்ல பண்பாளரை, அறிஞரைச் சந்தித்தோம்' என்ற மகிழ்ச்சியோடு ஊர் திரும்பினேன்.

நெல்லி மரத்துக் கல்யாணம்

பள்ளத்தூர் அழ ராம. சத்திரத்தில் 15—12—85 அன்று நெல்லிமரத்துக் கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது அதில் நகரத்தார் பெண்கள் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள் அன்றைய தினம் சத்திரம் ஸ்ரீ ஆட்கொண்ட விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

பெங்களூரில் சட்டக் கல்லூரி

இந்தியத் தலைமை நீதி மன்றத்தின் வழக்கறிஞர் சங்கமும் (Bar Council of India) கர்நாடக அரசும் இணைந்து பெங்களூரில் ஒரு சட்டக் கல்லூரியைத் தொடங்கவிருக்கின்றன. கல்வியின் காலம் 5 ஆண்டுகள். இது 1986 ஜூலையில் செயல்படவிருக்கிறது

இக்கல்லூரியில் 'நீங்கள் என்ன ஜாதி?' என்று கேட்காமல் தகுதி அடிப்படையில் எல்லா மாநிலத்தவருக்கும் வாய்ப்புக் கொடுப்பார்களாம்.

இங்கு கல்வி கற்போர் பெரிய நிறுவனங்களில் நிர்வாகப் பொறுப்பேற்கலாம். வழக்கறிஞராகத்தான் தொழில் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

பாடுவார் முத்தப்பர் கோட்டம்: கீழச்சிவல்பட்டியில் கூட்டம்!

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களுக்கு நினைவுக் கோட்டம் அமைப்பது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள 96 ஊர் நகரத்தார் மற்றும் அனைத்து நகரத்தார் சங்கத்தினர் கலந்து கொள்ளும் கூட்டம் 17—1—86 (தை மீ 4உ) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் மேல் நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் நடைபெற இருக்கிறது. அவ்வமயம் கோட்ட அமைப்புக்கு நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். அது சமயம் சட்ட திட்டங்கள் வகுக்கப்பெறும் என்றும் மற்றும் விளம்பரம் பெற்று மலர் வெளியிட ஒரு குழுவும் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய ஒரு குழுவும் வெளி நாடுகளில் நன்கொடை திரட்ட சில குழுக்களும் அமைக்கப்பெறுமென்றும் தெரிகிறது.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களது பாடல்களையும் வாழ்க்கை வரலாற்றையும் அவர் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சேர்த்து மிகப் பெரிய அளவில் நூலாக வெளியிடவும் மேற்படி குழு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

இக் கோட்ட அமைப்புக்கு ரூ.20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பெறுகிறது.

Koviloor Digital Library

101

எஸ்பி. இராமநாதன் செட்டியார்


1942ல், நாட்டு விடுதலை இயக்கத்தில் சேர்ந்து "சுயராஜ்யம் வேண்டும்; வெள்ளையனே வெளியேறு" என்று தேவகோட்டையில் கோஷம் எழுப்பிய நூற்றுக்கணக்கான பேரில் காரைக்குடி திரு. எஸ்பி. இராமனுதன் செட்டியாரும் ஒருவர். இப்போராட்டத்தில் பங்கு கொண்டதன் காரணமாக இவர் சுமார் நான்கு ஆண்டுகள் தலைமறைவாகி தீவிரமாகச் செயல்பட நேரிட்டது. (அதில் ஆறு மாதங்கள் மாறுவேடத்தில் இருந்தாராம்)

1946 வரை காங்கிரசில் தீவிர உறுப்பினராக இருந்த இவர், அதற்குப் பிறகு சாதாரண உறுப்பினர் ஆனுர். 1936ல் கதர் அணியத் தொடங்கிய இவர் இன்று வரை அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுள்ளார்.

திருவாளர்கள் கம்பன் அடிப்பொடி சா. கணேசன், சின்ன அண்ணாமலை, ஆர்ச் அண்ணாமலைச் செட்டியார், D. R. அருணாசலம், ஏஎல். எஸ்பி. திருநாவுக்கரசு செட்டியார், ஏஆர். சிற்சபேசன் செட்டியார் ஆகியோர் இவரது அரசியல் நண்பர்களாவர்.

பி. ஏ. பட்டதாரியான இவர், 1968 முதல் 1982 வரை அகில இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அமைப்பின் தமிழ்நாடு கிளையின் பொருளாளராகவும் 1982ல் தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் அமைப்புக் குழுவின் உதவித் தலைவராகவும் இருந்து செயலாற்றியவர். 1983 முதல் தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் அமைப்புக் குழுவில் மதுரை மாவட்டத் தலைவராக இருந்து வருகிறுர்.

பழநி, திருவாவினன்குடியில் அமைந்துள்ள குழந்தை வேலாயுத சாமி கோயில் இவரது அய்யா காரைக்குடி நா. மு. சுப. ராம.



பழநியில் 18–8–85 அன்று நடைபெற்ற காங்கிரஸ் நூற்றுண்டு விழாவல் பொதுச் செயலாளர் ஜி. கருப்பையா மூப்பனுர் அவர்கள் Sp. இராமநாதன் செட்டியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கும் காட்சி.

Koviloor Digital Library

101

அவர்களாலும் இவரது தந்தை யார் நா. மு. சுப. ராம. சுப. அவர்களாலும் இவரது சின்ன அய்யா நா. மு சுப. லெ, அவர்களாலும் கட்டப்பட்டு திருப்பணி செய்யப்பெற்று 1910ல் குட முழுக்கு நடைபெற்றது.

இக் கோயிலின் ராஜகோபுரத் திருப்பணி இவரது பங்காளிகளான நா. மு. சுப. நா. லெ., நா மு, சுப. நா ராம சொ , நா. மு, சுப. ராம மெ. மற்றும் இவரால் மேற்கொள்ளப்பட்டு 1968ல் முடிவு பெற்றது,

பழநி திருவாவினன்குடி குழந்தை வேலாயுதசாமி கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 9–9–83 ல் நடைபெற்றபோது யாகசாலைச் செலவு முழுவதையும் ஏற்றுச்சிறப்புறச் செய்தவர் இவர்.

தேசியத் தலைவர் எஸ். சத்திய மூர்த்தி அவர்களின் உருக்கமான மேடைப் பேச்சு தன்னை நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபடச் செய்தது என்றும் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் தன்னைச் சட்ட மன்ற உறுப்பினராக, நாடாளு மன்ற உறுப்பினராக ஆக்கிப் பார்க்கப் பெரிதும் விரும்பினுர்கள் என்றும் ஆனுல், தான் அதைத்தட்டிக் கழித்து விட்டதாகவும் அரசியல் ஈடுபாட்டால் தனது சொத்துக்களைக் கவனிக்க முடியாமல் பெருத்த நட்டம் ஏற்பட்டு விட்டது என்றும் இவர் கூறுகிருர்.

பேட்டி : எல். சுந்தரம்

குழந்தைக் கவிஞருக்கு டில்லியில் விருது

8–11–85, 9–11–85 ஆகிய இரு தினங்கள் புது டில்லியில் குழந்தைகள் கல்வி பற்றிய தேசிய மாநாடு (National Conference on Child Education) நடைபெற்றது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள சுமார் 2000 ஆசிரியர்கள் அதில் கலந்து கொண்டனர்.



தமிழில் குழந்தைஇலக்கியத்திற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளதைப் பாராட்டி இம்மாநாட்டில் ' குழந்தைக் கவிஞர் ' அழ. வள்ளியப்பா அவர்களுக்கு விருது வழங்கப்பெற்றது. பாராளுமன்றத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் கேடயம் வழங்கினுர். மத்திய கிராம நல அமைச்சர் திரு. சந்துலால் சந்திரகார் சால்வை அணிவித்தார்.

Koviloor Digital Library

மயில் மார்க் நிலைய திருமணச்சேவை

திருமண ஆக வேண்டிய பெண்கள், மாப்பிள்ளைகளைப் பெற்றிருக்கும் நகரத்தார்கள் கீழ்க்காணும் விவரங்களை எமக்கு அனுப்பி வைத்தால் முடிந்த வரை அவரவருக்குத் தகுந்த சம்பந்தங்களை அறிமுகப்படுத்தவும் தகவல் தெரிவித்து பேசி முடித்துக்கொள்ளவும் இயலும். இத்திருமணங்களுக்கு இலவசமாகச் சேவை செய்ய மயில் மார்க் நிலயத்தார் ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

தேவையான விவரங்கள் :

1. பெண் அல்லது மாப்பிள்ளையின் பெயர் 2. பெற்றோரின் பெயர்கள் (விலாசங்களுடன்) 3. சொந்த ஊர் 4. கோயில் விவரம் (பிரிவு இருந்தால் அதன் விவரம்) 5 சரியான வயது 6. படிப்பு விவரம் 7. வேலை பார்த்து வரும் விவரம் 8. தற்சமயம் உள்ள முகவரி.

மேற் குறித்த முழு விவரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்குக் கடிதம் எழுத வேண்டுகிறோம் :-

S. KR. *பழநியப்ப செட்டியார் அவர்கள்*
மயில் மார்க் நிலைய திருமணச் சேவை
No. **131, பழநியப்பா நகர்,**
சென்னை-600 087.

குறிப்பு : *எங்கள் திருமணச் சேவையின் மூலம் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பையன்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கப்படும்.*

புலி மார்க் வாசனைச் சீயக்காய்த் தூள்!
எம். எம். கூட்டுப் பெருங்காயம்!
எம். எம். ஒரிஜினல் அரப்புத் தூள்!

தயாரிப்பாளர்கள் :

மயில் மார்க் நிலயம்

431, T. H. ரோடு, *சென்னை - 600 021.*

Koviloor Digital Library

நல்லாசிரியர் நாராயணன்

திரு. வி. நாராயணன் காரைக்குடியைச் சேர்ந்தவர் 55 வயதுடையவர். திருக்கழுங்குன்றம் திரிபுரசுந்தரி ஆலயத் திருப்பணி செய்த தர்ம நாராயணன் செட்டியார் அவர்களின் பேரன். இவர் சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து எம்.ஏ.,(பொருளாதாரம்) பட்டமும் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து பி டி.. பட்டமும் பெற்றவர்.

காரைக்குடி மீனுட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டும் கலைத் தந்தையின் ஆ. தெக்கூர் ஸ்ரீ விசாலாட்சி கலா சாலையில் எட்டு ஆண்டுகளும் இவர் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் 1961 முதல் 1974வரை காரைக்குடி, வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களது பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் 1974 முதல் சிதப்பரம் இராமசாமிச் செட்டியாரின் நகர மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிருர்.

காரைக்குடியில் நடைபெற்ற தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது மாநில மாநாட்டின் பொருளாளராகவும். இராமநாதபுரம் மாவட்ட ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளராகவும் அரும்பணியாற்றியவர். கடந்த இரண்டாண்டுகளாக கடலூர் கல்வி மாவட்ட தலைமை ஆசிரியர் கழகத்தின் தலைவராகப் பணி புரிந்து வருகிருர்.

இவர் 'உயிருட்டும் சிந்தனைகள்' என்ற நூலைப் படைத்துள்ளார். 1983 – 84ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற பெருமைக்குரிய திரு நாராயணன் மேலும் புகழ்பெற வாழ்த்துகிரேம்.

— "எல்லெஸ்"



தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களிடமிருந்து வி. நாராயணன் அவர்கள் நல்லாசிரியர் விருது பெறும் காட்சி

Koviloor Digital Library

வயிரவக் குருக்களுடன் ஒரு பேட்டி

''வயிரவன் கோயிலின் பூஜை முறைகள் மற்றும் இங்குள்ள சிறப்புக்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறுங்களேன்'' என்று வயிரவன்கோயிலில் உள்ள வடுகநாதக் குருக்களின் புதல்வர் திரு. வயிரவக் குருக்களைக் கேட்ட போது அவர் கூறியதாவது:-

இக்கோயிலில் எங்கள் பரம்பரை நான்கு தலைமுறைகளாக இருந்து வருகிறது.

இங்கு ஆறு காலப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன தினசரி சாயரட்சைப் பூஜை மட்டும் நகரத் தாருக்கு உரிய காலமாகும். அது சமயம் இளையாத்தக்குடிக் கோயில் ஒக்கூருடையாருக்கு முதல் மரியா தை வழங்கப்பெறுகிறது. அடுத்து எட்டு அயற்கோயில்களைச் சேர்ந்த நகரத்தாருக்கும் அதையடுத்து வயிரவன் கோயில் தெய்யனார் வகுப்பு நகரத்தாருக்கும் மரியாதை வழங்கப்பெறுகிறது இவர்கள் மூவருக்கும் காளாஞ்சி மரியாதை உண்டு. அடுத்து நகரத்தாருக்கு மரியாதை. பாக்கி ஐந்து காலங் களிலும் பெரியவர்களுக்கு முதல் மரியாதை வழங்கப்பெறுகிறது.

வயிரவ சுவாமிக்கு எதிரே தூணில் ஒரு சிலை உருவம் உள்ளது அது அரியக்குடி தெய்ய னாஞ் செட்டியாருடையது. இவர் தான் இக்கோயிலில் முதல் திருப் பணி வேலைகளைச் செய்தார் என்று கருதப்படுகிறது. இவரது சிலைக்கு வெள்ளி தோறும் எண்ணெய் சாத்தி மாலை அணிவிக்கிறோம். இதற்காகவே ஒரு வைராவி இருக் கிறார். சொக்கர், பல்லக்கில் பள்ளி யறைக்குப் போகும்போது தெய்ய னாஞ் செட்டியார் சிலைக்கு தினமும் மும்முறை திருஷ்டி சுற்றப்பெறுகி றது. இவருடைய பெயரால்தான் வயிரவன் கோயில் சிறுகுளத்தூரு டையார் பிரிவில் உட்பிரிவுகளில் ஒன்றான தெய்யனார் வகுப்பு ஏற் பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள தட்சிணாமூர்த்தி மண்டபத்திற்கு எதிரே தூணில் ஒரு சிலை உருவம் உள்ளது. அது பள்ளத்தூர் சொக்கலிங் செட்டியா ருடையது. இச்சிலைக்கும் வெள்ளி தோறும் எண்ணெய் சாத்தி மாலை அணிவிக்கப்பெறுகிறது. இவரால் தான் பிள்ளையார் வகுப்பு ஏற்பட்ட தாகக் கூறப்படுகிறது.

—இவ்வாறு அவர் கூறினார்.

வேளாண்மை பற்றிய நூல்

வேளாண்மை தொடர்பான கல்வி வகைகள், அவற்றைக் கற் பதற்குக் கிடைக்கும் உதவித் தொகை, படித்தபின் கிடைக்கும் வேலை பற்றியவிவரங்கள் போன்ற வைகள் சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'வேளாண்மைப் பல்கலைக் கழகம்' என்ற நூலில் உள்ளன. நூலின் விலை ரூ. 20-00.

இலுப்பைக்குடிக் கோயிலுக்குப் புதிய அறங்காவலர்கள்

தேவகோட்டை எஸ்பி. எஸ். மெய்யப்ப செட்டியார் அவர்களும் கோனாபட்டு மெ. சித. மெய்யப்ப செட்டியார் அவர்களும் இலுப் பைக்குடிக் கோயிலுக்குப் புதிய அறங்காவலர்களாக இலுப்பைக் குடிக் கோயில் நகரக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார் கள். இவர்கள் மூன்று ஆண்டு களுக்குப் பதவி வகிப்பார்கள்.

Koviloor Digital Library

வயிரவன் கோயில் நிர்வாகக் குழு

வயிரவன்பட்டியில் உள்ள வயிரவன் கோயில், ஏற்கனவே நகரத்தார்களால் நியமிக்கப்பெற்ற காரியக்காரர்கள் மூலம் நடத்தி வரப்பெற்றது.

7–2–1980ல் 'வயிரவன் கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்' நிறுவப்பெற்று சொஸைட்டிகள் பதிவுச் சட்டம் (Tamil Nadu Act 27 of 1975) பிரிவு 4ன்படி காரைக்குடி மாவட்டப் பதிவாளரிடம் 22–3–1980ல் பதிவு செய்யப் பெற்று நிர்வாகக் குழு மூலம் இயங்கி வருகிறது.

வயிரவன் கோயில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்திற்கு 23–3–85 முதல் கருங்குளம் ஆர்எம். ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் தலைவராகவும் இராயவரம் ப. வ. பழ. ராம. பழநியப்ப செட்டியார் அவர்கள், வலையபட்டி ஆ. பழ. சுப்பையா அவர்கள் ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும் காரைக்குடி க. தெ. க. அள. அ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் செயலாளராகவும் புதுவயல் அழகு வீரப்பன் அவர்கள் துணைச் செயலாளராகவும் இருந்து சிறப்பாக நிர்வகித்து வருகிறார்கள். இவர்களது பதவிக் காலம் 22–3–87 வரை உள்ளது.

வயிரவன் கோயில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தில் 76 பேர் செயற்குழு உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 15 பேர் நிர்வாகக் குழுவில் துணைக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

வயிரவன் கோயில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் நிரந்தரமாக வசித்து வரும் ஒவ்வொரு செட்டிநாட்டு ஊரிலிருந்தும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்கள்.

சங்கத்தின் உறுப்பினர்கள் 100 பேர் வரை உள்ள ஊர்களிலிருந்து ஒரு செயற்குழு உறுப்பினரும் 200 பேர் வரை உள்ள ஊர்களிலிருந்து 2 செயற்குழு உறுப்பினர்களும் 400 பேர் வரை உள்ள ஊர்களிலிருந்து 3 செயற்குழு உறுப்பினர்களும் 600 பேர் வரை உள்ள ஊர்களிலிருந்து 4 செயற்குழு உறுப்பினர்களும் தேர்வு செய்யப் பெறுகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுக் குழு கூடுகிறது. ஆண்டிற்கு இருமுறை செயற்குழு கூடுகிறது.

இயற்கை எய்தினர்

கண்டரமாணிக்கம் பழ. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தமது 48 வது வயதில் 18-10-85 அன்று ஈரோட்டில் இயற்கை எய்தினார்கள். அவர்களுக்கு மனைவி திருமதி வசந்தாள் ஆச்சியும் இரண்டு புதல்வர்களும், இரண்டு புதல்விகளும் உள்ளனர்.

ஃ ஃ

பலவான்குடி சிவத்திரு கும. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் 29—10—85 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

எம் ஏ. பட்டதாரியான இவர்கள் அண்ணாமலை நகரில் பயிலும் பொழுது செட்டியார் இளைஞர் சங்கத்தைத் தோற்றுவித்தவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் நிர்வாக மேலாளராகப் பணிபுரிந்தார்கள். பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற புத்தகம் வெளிவருவதற்கு இவர்கள் முயற்சி செய்தவர்கள். மலேஷியாவில் நகரத்தார் சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்கள். மலேஷியாவில் 'தமிழ் நேசன்' நாளிதழின் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தவர்கள்.

Koviloor Digital Library

வயிரவன்பட்டியில் பிள்ளையார் நோன்பு!

பிள்ளையார் நோன்பு, நகரத்தார்கள் மட்டுமே கொண்டாடும் ஒரு பண்டிகை ஆகும். இப்பண்டிகை இப்போது கோயில்களிலும், சங்கங்களிலும், மடங்களிலும் பொது அமைப்புக்களிலும் மற்றும் தனியார் இல்லங்களிலும் பக்தியோடு கொண்டாடப்பெறுகின்றது

நகரக் கோயில்களில் ஒன்ருன வயிரவன் கோயில் அமைந்துள்ள வயிரவன்பட்டியில் இப்பண்டிகை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதாகக் கேள்விப்பட்டு இந்த ஆண்டு நான் அங்கு சென்று வந்தேன். 'சென்று வந்தேன்' என்று கூறுவதைக் காட்டிலும் 'கலந்து கொள்ளும் பேறு பெற்றேன்' என்று கூறுவது பொருத்தமாகும்.

பிள்ளையார் நோன்பு பற்றி செய்தியைச் சேகரிப்பதோடு வயிரவன் கோயில் பற்றிய செய்திகளையும் சேகரித்து வரலாம் என்ற எண்ணத்தில் பிள்ளையார் நோன்பு அன்று (17-12-85) காலை சுமார் 9-50க்கு வயிரவன்பட்டி போய்ச் சேர்ந்தேன். அந்நேரத்தில் கோயிலிலும், விடுதியிலும் வெளியிலுமாகச் சுமார் 50 பேரே இருந்த



வயிரவன் கோயிலில் 17-12-85 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றபோது பொன் புதுப்பட்டி நா. க. ராம. இராமசாமிச் செட்டியார், காரைக்குடி பழ. தெ. லெ. அருணசலம் செட்டியார், கல்லல் ராம. வெ. லெ. நாச்சியப்ப செட்டியார் ஆகியோர் நகரத்தார் பெண்களுக்கு இழை எடுத்துக் கொடுக்கும் காட்சி.

Koviloor Digital Library

னர். மாலே 4 மணியிலிருந்து நகரத்தார் பெருமக்கள் சாரி சாரியாக வரத் தொடங்கினர்.

பிள்ளேயார் நோன்பையொட்டி வயிரவன் கோயில் வளரொளி நாதருக்கும் வயிரவ சுவாமிக்கும் வடிவுடையம்மைக்கும் உற்சவ வயிரவருக்கும் அலங்கார அபிஷேக ஆராதனேகள் சிறப்புற நடைபெற்ற வண்ணமிருந்தன.

அன்று மாலே வயிரவர் சொர்ண அங்கியுடன் காட்சி தந்து அருள் பாலித்தார் மற்ற தெய்வங்கள் வெள்ளி அங்கியுடன் காட்சி தந்து அருள் பாலித்தன.

வயிரவன்பட்டி, வயிரவன் கோயில் நகரத்தார் விடுதியில் நகரத்தார் ஆண்களும் பெண்களும் பெருமளவில் கூடியிருக்க விநாயகருக்குத் தீபாராதனே நடைபெற்ற பின் இரவு சுமார் 7-45மணியளவில் பிள்ளேயார் நோன்பு விழாத் தொடங்கியது.

பல தாம்பாளங்களில் தயாராய்ச் செய்து வைக்கப்பெற்றிருந்த இழை மாவுத் திரியில் நெய் பூசி பல அன்பர்கள் எடுத்துக் கொடுக்க அவற்றைப் பெற்றுக் கொண்ட பொன். புதுப்பட்டி நா. க ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள், அரியக்குடி ராம சா. சாத்தப்ப செட்டியர் அவர்கள் கல்லல் ராம. வெ. லெ. நாச்சியப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி கரு. கதி கருப்பஞ் செட்டியார் அவர்கள், காரைக்குடி பழ தெ. லெ. அருணுசலம் செட்டியார் அவர்கள் (காவிரிப் பூம் பட்டினத்துக் கதாநாயகர்) ஆகியோர் தீப ஒளியில் அவற்றை ஏற்றி நகரத்தார் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு வாழ்த்தி வழங்கியதும் அவர்கள் பெரியோர்களே வணங்கிப் பெற்று உண்டதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

சுமார் 1000 பேருக்கு அவர்கள் 120 நிமிடங்களில் இழை எடுத்துக் கொடுத்துச் சிறப்பித்தனர். இரவு 10 மணிக்குள் ஊர் திரும்பிச் செல்ல வேண்டுமென்ற கட்டாயத்திலிருந்தவர்களால் இழை எடுத்துக் கொடுத்த பெரியவர்களுக்குக் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது அந்தத் தள்ளுமுள்ளு ஒரு 15 நிமிடங்கள்தான். பிறகு அமைதியாக அழகாக அது தொடர்ந்தது.

இரவுப் பலகாரம் முடிந்தபின் இரவு சுமார் 10-15மணிக்கு விடுதியில் மஞ்சள், தேங்காய் கல்கண்டு, சீனி, சர்க்கரை, வெல்லம் கழிப்பாக்கு, சுருள்பாக்கு, எலுமிச்சம் பழம், உப்பு, பேரீச்சம்பழம் ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு, கருப்பட்டிப் பணியாரம், சுவாமிகளுக்கு அணிவிக்கப் பெற்ற பட்டுகள், மலர் மாலேகள் ஆகியவை ஏலத்தில் விடப்பெற்றன. காரைக்குடி பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார் அவர்கள் ஏலம் கூவ, ஏலம் எடுத்தவர்களுக்கு பொன். புதுப்பட்டி நா. க ராம இராமசாமிச் செட்டியார் அவர்கள் ஏலப் பொருட்களே வழங்கினுர்கள்.

பிரார்த்தனே செய்துகொண்ட பல அன்பர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த தடுக்கு, கூடை, கொட்டான், உடைகள் போன்றவையும் இங்கு ஏலத்தில் விடப்பெற்றன. ஏலம் அதிகாலே 12-30 வரை நடைபெற்றது.

வயிரவன் கோயிலில் நடைபெற்ற பிள்ளேயார் நோன்புப் பண்டிகையில் வயிரவன் கோயில் நகரத்தார் தவிர ஏனேய எல்லாக் கோயில் நகரத்தார்களும் கலந்து கொண்டு. சிறப்பித்தனர்.

வயிரவன் கோயிலில் தொடக்கத்தில் மார்கழி மாதத்தில் சம்பா சஷ்டித் திருவிழா 7நாட்கள் நடை

Koviloor Digital Library

பெற்றதென்றும் சில காரணங்களால் அது தொடர்ந்து நடைபெறவில்லை என்றும் கூறப்பெறுகிறது.

இந்தப் பிள்ளையார் நோன்புப் பண்டிகை 1947 முதல் வயிரவன் கோயிலில் தொடர்ந்து ஒவ்வோராண்டும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதாகவும் இழை எடுத்துக் கொள்வதற்காக நகரத்தார்களிடம் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை என்றும் வயிரவன் கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் மானேஜர் தேவகோட்டை ராம. மாணிக்கம் செட்டியார் அவர்கள் கூறினர்கள்.

இராயவரம் திரு ப. வ ராம. குழ குடும்பத்தார், பாகனேரி திரு அரு கி. கிருஷ்ணன் செட்டியார், கருங்குளம் திரு இராம. ரெங்கநாதன் செட்டியார், பொன். புதுப்பட்டி திரு நா. க. ராம. ராமசாமிச் செட்டியார் பூலாங்குறிச்சி திரு கரு சி. அ. கருப்பன் செட்டியார் ஆகிய பெருமக்கள் கடந்த 5 ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு ஆளுக்கு ரூ. 500 வீதம் பிள்ளையார் நோன்புப் பண்டிகைச் செலவிற்கு நன்கொடை வழங்கி வருவதாகவும் இந்த ஆண்டு மேற்கண்ட பெருமக்களின் நன்கொடையோடு தேவகோட்டை கிழவன் செட்டியார் டிரஸ்ட்டிலிருந்து ரூ 500- நன்கொடை வந்துள்ளதாகவும் பணம் மேலும் தேவைப்பட்டால் வயிரவன் கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் உதவியளிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

பிள்ளையார் நோன்புப் பண்டிகை அன்று விருந்து பரிமாறும் தொண்டினை கண்டனூர் நகரத்தார் இளைஞர் வளர்ச்சிக் குழுவினரும் புதுவயல் நகரத்தார் இளைஞர் சங்கத்தினரும் ஏற்று சிறப்புறச் செய்தார்கள். கண்டனூர் திரு வயி. ராம நா. ராம. வயிரவன் செட்டியார் 25 வயது இளைஞரைப் போல் அனைத்துக் காரியங்களையும் சுறுசுறுப்புடன் செய்து உதவினர்.

'நல்ல விழாவில் கலந்து கொண்டோம்' என்ற பெருமையோடு 18-12-85 அன்று அதிகாலையில் அங்கிருந்து மதுரைக்குப் புறப்பட்டேன்.

—எல். சுந்தரம்



Koviloor Digital Library


மணிவிழாவோடு திருமணம்: ஓர் யோசனை

பெரிய அளவில் மணிவிழாச் செய்து கொள்பவர்கள் தங்கள் பங்காளி வீட்டில் அல்லது உற வினர் வீட்டில் திருமணமாகாது உள்ள ஒரு பெண்ணுக்குத் திரு மணம் செய்து வைக்கலாம் காரைக்குடி வீர. ராம. வீர. இரா மசாமிச் செட்டியார் அவர்கள் (சேந்தணியார் வீடு) தம் மணி விழாவிலும் சதாபிஷேகத்திலும் இவ்வாறு திருமணம் செய்து வைத்து வழிகாட்டியிருக்கிருர்கள். தொழிலதிபர் கண்டரமாணிக்கம் எல். நாராயணன் செட்டியார் அவர்கள் 11-2-86 அன்று நிகழ விருக்கும் தம் மணிவிழாவில் நம இனப் பெண் ஒருவருக்குத் திரு மணம் செய்து வைக்க இருக்கி ருர்கள். இதுபோல் வசதியுள்ள நம்மவர்கள் நம்மில் வசதியற்ற பெண்களுக்குத் திருமணங்களைச் செய்து வைத்துப் புண்ணியத் தைத் தேடிக் கொள்வார்களாக.

இப்படிக்கு
எஸ். கண்ணப்பன், சென்னை

கல்வி

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் ஜனவரி '86 முதல் 'Corporate Secretaryship' என்ற பட்ட மேற்படிப்புக் கல்வியைத் தொடங்க இருக்கிருர்கள். B.Com., B. B. A. யில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் இதில் சேர்ந்து கல்வியைக் கற்ருல் பெரிய நிறுவனங்களின் நிர்வா கப் பொறுப்பை ஏற்கலாம்.



கவிஞர் கண்ணதாசன், கனக தாசன் என அழைக்கப் பெறும் வேந்தன்பட்டி பெரி. சிவனடி யான் செட்டியார் அவர்களின் புதல்வியும் கோவை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு காசிநாத் ராஜனின் தங்கையு மான செல்வி தமிழரசி M.Sc., M.Phillக்கும் பள்ளத்தூர் கதிரே சன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் அண்ணுமலை B.E.(Hons) M.S. (Sanfrancisco) க்கும் 17-11-85 அன்று வேந்தன் பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது வாழ்த்துக் கூட் டத்தில் கோவை நகரத்தார் சங் கத் தலைவர் திரு நாக நாகப்ப செட்டியார் செயலாளர் திரு. கலைமகள் இராமநாதன், பேராசி ரியர் திரு. மெய்யப்பன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்த னர்.

Koviloor Digital Library



பாடுவார் முத்தப்பர் வாழ்வும் வனப்பும்

அருட்கவி
அழகாபுரி இளங்கோவன்

—16—

மகனுக்கே அறம்பாடிய மாகவிஞர் பாடுவார் !

இதுவரை முத்தப்பர் பலர் மீது பாடிய இசையும், வசையும் அமைந்த பாடல்கள் பலவற்றைப் பார்த்தோம். இப்போது அவர் தனது மகனுக்கே அறம்பாடிய நிகழ்ச்சியைப் பார்ப்போம். முத்தப்பர் வாழ்விலே செய்த பெருங் கெடுதி அவரது மூத்த மகனை சர்க்கரைக் கருப்பஞ் செட்டியாரின் புலமையை ஒடுக்கியதே என்பர்.

சர்க்கரைக் கருப்பஞ் செட்டியார் முத்தப்பரது வசைக்கு ஆளாகாமலிருந்தால், நாம் இன்று முத்தப்பரின் வழிவழிச் சேய்கள் பலரும் அமுதாம் கவிதர அகமகிழ்ந்திருப்போம். ஆனல் முத்தப்பருடைய...இல்லை...இல்லை ......நம்முடைய தவக் குறையே இந்த வாய்ப்பைத் தர மறுத்துவிட்டது. ஆம்! முத்தப்பர் என்ன செய்வார்? புலவர்களின் வாக்கிலே அவர்களையும் அறியாமல் அறம் விழுந்து விடுகின்றது!

சர்க்கரைக் கருப்பையாவும் தனது தந்தையைப் போலவே இளமையிலேயே கலைமகள் அருள் கைவரப்பெற்றிருந்தார். அவருக்குப் பதின்மூன்று வயதில் ஒருநாள், அவித்த நெல்லைப் பாறையில் விரித்துக் காவல் காத்துக் கொண்டிருந்தபோது, காக்கைகள் வந்து நெல்லைக் கொத்தித் தின்றன அந்நாளில் நெல்லை அவித்து பாறையில் ஆலாட்டுவது வழக்கமாம். காக்கையை ஓட்டி ஓட்டிக் கை ஓய்ந்த ஒரு சிறுவன் 'சாக்தருவி சா! சா!' என்ருன். அவனது நிலை கண்டு மனம் கிளர்ந்த கருப்பையா தன்னை மறந்து பின் விளைவை அறியாது பாடத் தொடங்கினர். முதற் பாட்டிலேயே முற்றிய அறம் விழுந்து விட்டது

காகா எனக்கதறும் காகங்காள் இப்பொழுதே
போகாது போனலோ பொல்லாப்பாம்—சாகாதீர்!
நெல்லை அருந்துதற்கு நீர்வந்தீர் யானுமக்குச்
சொல்லிவைத்தேன் செல்வீர் தொலைந்து!

நித்தம் அளக்கும் மரக்காலால்
நெல்லை அளந்து பொட்டலிலே
மெத்தை போட்டுப் பாய்விரித்து
மேவிக் காவல் நானிருக்கச்

Koviloor Digital Library

சற்றும் பயமே இல்லாமல்
    தனியே காகம் தின்றதனுல்
செத்துப் போகக் கடவீர்கள்
    சிவனே உந்தன் அடைக்கலமே !

பாட்டு முடிந்தபோது அங்கிருந்த காக்கைகள் எல்லாம் சிறகலுத்து செத்துக் கிடந்தன. குளித்துவிட்டு அப்போதுதான் அங்கு வந்த முத்தப்பர் தன் மகனையும் செத்துக் கிடந்த காகங்களையும் மாறிமாறிப் பார்த்தார். 'தலையிருக்க வாலாடும் தகைமை ஒழிந்திடுக!' என்று சொன்னர். பிறகுதான் அவருக்குத் தன்னுணர்வு வந்தது. 'பையன் ஒடுங்கிவிட்டானே! அவனது புலமையையுமல்லவா ஒடுக்கி விட்டேன்!' என்று வருந்தினர். பிறகு ஒருபோதும் கருப்பஞ் செட்டியார் கவி பாடவே முடியாது போயிற்று! ஆ! ஆ! அருளாளர்களின் வாக்கினைப் பிறகு அவர்களாலேயே ஒருநாளும் மாற்ற முடியவில்லை!

இத்தரை போற்றும் முத்தப்பர் இறைவன் அடியில் துயில்கின்ருர்

முத்தப்பருக்கு வயது எழுபத்து மூன்று, அப்போது முத்தப்பரின் மூத்த மகன் கருப்பஞ்செட்டியார் பெருவழக்கு ஒன்றில் ஈடுபட்டுத் துன் புற்ருர். அதன் காரணமாகவே அவர் மிகுந்த மனக்கவலையும், உடல் தளர்ச்சியுமடைந்தார். அப்போதும் முத்தப்பர் தன் ஊருக்கு அண்மை யிலே உள்ள நெடுமரம் மலையரசி அம்மன் கோவிலுக்குச் சென்று தன் மகனுக்கு நீதி கிடைக்குமாறு முறையிட்டு அறுபத்து நான்கு வரிகளிலே ஒரு பெரிய பாடலைப் பாடினர். அதன் இறுதியில மைந்த பதினறு வரிகளை இங்குக் காண்க:

நேயமுடன் நாங்கள்போய் அவர்கள்கை மனிதரை
    நிராகரிப் பாய டித்து
ரெம்பவுமா னத்தாழ்வு செய்ததாய்ப் பொய்ச்சாட்சி
    நியமித்து மேஸ்தி ரிட்டில்
நிசமென்ப தாய்ப்பொய்ப் பிராதும் கொடுத்து
    வாரண்டு கூட்டி வந்து
நின்னில்வந் தென்மகனை மதுரைக் கழைத்துப்போய்
    நிசவான் சவாரி சென்று
நிலக்கோட்டை உத்தம பாளையம் தன்னிலே
    இருக்கின்ற செய்தி கேட்டோம்
நிசமற்ற பேரின்ன மென்னென்ன வஞ்சகம்
    நினைப்பார்க ளோஅறி கிலேன் !
நிமலிநீ உலகதுணை ஆகையால் இருவருட
    நிசம்பொயிர ண்டையுவி ளங்கி
நீதியுடன் நியாயமும் தந்தல்லோ எங்களை
    நீகாத்து ரட்சி அம்மா!

மலையரசியிடம் முறையிட்டதன் பலனக முடிவில் முத்தப்பர் மகனுக்கும் நீதி கிடைத்துவிட்டது. ஆயினும் உடல் நலம் வரவரக் குன்றியது. காய்ச்சல் அடிக்கடி வந்து கவலைப் படுத்தியது.

முடிவிலே தனவணிகரான நகரத்தார் பெருமக்களுக்குப் பெரு வாழ்வும், தமிழுக்குப் புதுநலமும் தந்த பாடுவார் முத்தப்பர் அவர்கள் சர்வசித்து ஆண்டு ஐப்பசித் திங்கள் வளர்பிறை பத்தாம் நாளில் (21-10-1823)பகல் பதினைந்து நாழிகையில் முக்தி பெற்ருர் கள். முத்தப்பரது உயிர் பிரியுமுன்னர் அவர் திருவாய் மலர்ந்தருளிய பாடல் இது:

Koviloor Digital Library

தொகுதிபெறு சர்வசித்து வருடந் தன்னில்
துலாமாதம் தேதிபத்து சுக்ர வாரம்
பகுதிபெறு செயங்கொண்ட சோழீ சர்தம்
பாதமதிற் சேர்ந்துவெகு பலம்பெற் றேனே !

அவரது உலக வாழ்க்கை முற்றுப் பெற்றது. புகழுடம்பை நிலை நிறுத்தி விட்டு அவரது பூத உடல் மறைந்தது. அவரது திருவாக் கின்படியே செயங்கொண்ட சோழீசர் தம் பாதமலரில் அவரது உயிர் வண்டு உறங்கச் சென்றது!

முத்தப்பர் முக்திபெற்ற நாளாகிய ஐப்பசித் திங்களில் சூர சம் ஹாரத்தன்று கீழச்சிவல்பட்டி அம்மன் சன்னதி வீதியில் அமைந்து அருள் வழங்கும் முத்தப்பரது திருஉருவச்சிலை அமைந்துள்ள மடத் தில் அவரது மரபுவழி வந்த பேரன்மார்கள் முத்தப்பருக்குச் சிறந்த முறையில் குருபூசை நடத்தி வருகின்றனர். அப்போது ஆயிரக் கணக்கான ஏழை எளிய மக்களுக்கு அன்னதானமும் செய்து வருகின் றனர்.

முத்தப்பரைப் பற்றி எவ்வளவோ எழுதலாம்; எழுதிக்கொண்டே யிருக்கலாம். இதுபோன்ற தொடர் கட்டுரைகளும், பல நூல்களும் வெளிவந்தால்தான் முத்தப்பரைப் பற்றி உலகம் நன்கு தெரிந்து கொள்ள இயலும். கீழச்சிவல்பட்டியிலும், சேவினிப் பட்டியிலும் அமைந்துள்ள முத்தப்பர் கோவில்கள் ஏறக்குறைய நூறு ஆண்டுகட் கும் முன்னுலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றே நான் கருதுகின்றேன். இதனை எந்த ஆண்டில் யார் அமைத்தார்கள் என் பதுபற்றி உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. இக்கோவில்களும் இப்போது மீண்டும் புதுப்பிக்க வேண்டிய நிலையிலேதான் உள்ளன.

அண்மையில் எனது அருமைத் தம்பி மறைமலையின் திருமண விழா வாழ்த்தரங்கத்தில் கலந்துகொண்டு தலைமை ஏற்றுச் சிறப்பித்த எங்கள் பங்காளியும், கல்விவள்ளலுமாகிய தேவகோட்டை உ. ராம. மெ. சுப. சேவு. அண்ணுமலை செட்டியார் அவர்கள் அப்போது எங்கள் பாடுவார் ஐயாவின் அருமை பெருமைகளையும் வாக்குப் பலிதத்தையும் விளக்கி உரைத்தார்கள். அவர்களிடம் நான் இக்கோவில்களை நேரில் வந்து கண்டு திருப்பணிகள் செய்ய ஏற்பாடுகள் செய்துதர வேண்டு மெனக் கேட்டுக்கொண்டேன். அவர்களும் அன்புடன் இசைவு தந்துள் ளார்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

அருட்கவி பாடுவார் முத்தப்பர் அவர்கள், செயங்கொண்டார் பிள்ளைத் தமிழ், செயங்கொண்டார் பதிற்றுப் பத்து அந்தாதி, செயங் கொண்டார் கலித்துறை அந்தாதி, செயங்கொண்டார் ஊஞ்சல் திருநா மம், நேம நகர்க் கலம்பகம், குளுவ நாடகம் இன்னும் எண்ணற்ற தனிப் பாடல்களையும் பாடியுள்ளதாகச் சொல்கின்றனர். ஆனுல் அவை இது நாள்வரை கிடைக்கவில்லை. நமது செட்டி நாட்டில் யாரிடமேனும் இப்பாடல்கள் அமைந்த ஏட்டுப் பிரதிகளோ, அல்லது பெரியவர்கள் சொல்லக் கேட்டு எழுதிய பாடல்களோ இருந்தால் அவர்கள் என்னு டன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

முற்காலத்திலே மரக்காலிலே சரக்களந்து விற்ற நமது நகரத்தார் பெருமக்கள் இன்று பாடுவாரின் நல்வாக்கினுல் பற்பல தொழில்களி லும் பங்கு பெற்றுச் செல்வச் செழிப்போடும், சீரும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்து வருகின்றனர். விரைவிலேயே உலக ஆட்சியும்

Koviloor Digital Library

அவர்களை நாடிவரக் காத்திருக்கிறது. எனவே நமது நகரத்தார் பெரு மக்கள் மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகத்தினைச் சேர்ந்த அனைவருமே முத்தப்பரைப் போற்றிப் புகழ்வர்!

முத்தப்பரது அருள்வாக்கு நமக்குத் துணை நிற்குமாக! நமது கடமை உணர்ச்சி, நமது செயல்கள் எல்லாம் நம்மிடையே இப்போதும் பல முத்தப்பர்களைத் தோற்றுவிக்குமாகுக! வாழ்கபாடுவார் முத்தப்பர்! வளர்க முத்தமிழ்!

பத்தரை மாற்றுத்தங்கம் பாடுவார் முத்தப்பையா
சொத்தெலாம் பாடலாகச் சுகமுடன் கருதிநாளும்
இத்தரை காண வேண்டி இன்னிய தொடராய்த் தந்த
நத்திடு புகழ்மிகுத்த நகரத்தார் குரலும் வாழ்க!
முத்திரை பாட்டில்வைத்த முத்தப்பப் பாடுவாரின்
வித்தினை இந்த நாளில் விளையவே வைத்தார் வாழ்க!
அத்தனும் மதுரைக் கூத்தன் அம்மைமீ னாட்சிகாக்க
அத்தனை பேரும் வாழ்க ஐயாவின் பாடல்போலே!

முற்றுப் பெற்றது



பாகனேரி சுப். வே. மாணிக்கம் செட்டியார் (ஸ்ரீ லெட்சுமி கார்ப்பரேசன் இரும்பு வியாபாரம் திருச்சி) அவர்களின் பேத்தியும் மதகுபட்டி செ. மு. கண. சே. சேதுராமனாதன் செட்டியார் (ஆபீஸர் இந்தியன் பேங்க், சிங்கப்பூர்) அவர்களின் புதல்வியுமான செல்வி மீனாட்சி என்ற சாந்திக்கும் நாட்டரசன்கோட்டை ச. ராம ராம. சங்கரநாராயணன் செட்டியார் (கிருஷ்ணா கார்ப்பரேஷன், இரும்பு வியாபாரம், திருச்சி) அவர்களின் புதல்வன் செலவன் கண்ணப்பன் என்ற செந்திலுக்கும் மதகுபட்டியில் 27-10-85 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தில் நண்பர்களும் இரும்பு வியாபாரிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Koviloor Digital Library

வயிரவன் கோயில் : சில தகவல்கள்!

ஃ வயிரவன் கோயில், நகரத்தார்களுக்கு வளவேந்திரராஜன் என்ற பாண்டிய மன்னனால் கலியுகம் 3813 ஆம் ஆண்டில் (கி பி. 712) வழங்கப் பெற்றுள்ளதாக வரலாறு கூறுகிறது

ஃ வயிரவன் கோயில், நகரத்தார்களிடம் ஒப்படைக்கப்பட்ட போது 13 கிராமங்கள் அதனுடன் இருந்ததாகவும் இப்போது குருந்தன்காலி ஏந்தல், கோனேரி ஏந்தல் என்ற இரு கிராமங்களுக்கு மட்டுமே பட்டா உள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஃ வயிரவன் கோயிலில் மின் விளக்கு உபயம் செய்தவர்கள் தெய்யனூர் வகுப்பு நகரத்தார்கள் என்று கூறப்படுகிறது.

ஃ இங்கு திருப்பணி வேலை 1864ல் தொடங்கப்பட்டுள்ளது என்ற விவரம் கருவறைப் புறச் சுவரில் உள்ளது.


ஃ கண்டனூர் அ. நா. குடும்பத்தைச் சேர்ந்த நா. அ. வெ. ராம. இராமசாமிச் செட்டியார் இக் கோயிற் கட்டிடங்கள் உருவாவதற்கு உறுதுணையாக 40 ஆண்டுகள் இவ்வூரிலேயே தங்கி கோயில் திருப்பணியை நிறைவு செய்தார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஃ இங்கு வயிரவசுவாமி மூலவராக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். வளரொளிநாதரும் வடிவுடையம்மையும் தனித் தனிச் சன்னதிகளில் இருந்து அருள்பாலிக்கிறார்கள்.

ஃ சேந்தன்குடி வி. நடராசக் கவிராயர் வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இது 1894ல் அச்சு வடிவம் பெற்றுள்ளது.

ஃ வயிரவன் கோயிலில் உள்ள ஸ்தலவிருட்சம் அழிஞ்சிமரமாகும். இந்த மரத்திலிருந்து உதிரும் பழம் மீண்டும் கிளையில் ஒட்டிக் கொள்ளுமாம்.

ஃ வயிரவன் கோயில் புராணம், வயிரவன் கோயிலில் முதல் பிரகா




வயிரவன்பட்டி வயிரவன் கோயிலின் அழகுமிகு தோற்றம்.

Koviloor Digital Library

ரம், கிழக்குப் பகுதி நெத்திச் சுவரில் வரை படமாக உள்ளது.

ஃ வயிரவர் சூலாயுதம் கொண்டு அசுரனை வதம் செய்ததால் பைரவ தீர்த்தம் ஏற்பட்டதாகப் புராணம் கூறுகிறது. (இந்த பைரவ தீர்த்தம் வெளிப் பிரகாரத்தில் தெற்குப் பக்கம் உள்ளது.)



வடிவுடையம்மை

ஃ இக்கோயிலில் அதிகார நந்திக்குத் தனி விமானமும் தனி மண்டபமும் உள்ளன.

ஃ இக்கோயிலிலுள்ள தட்சிணமூர்த்தி மண்டபம் கலை அழகு மிக்கது. இதில் உள்ள கற்தூண்கள் பலவித இசைகளை எழுப்புகின்றன

ஃ இங்கு ஒரே கல்லில் உருவாக்கப் பெற்ற தூணும் குதிரை மேல் உள்ள வீரன் சிலையும் முதல் பிரகாரத்தில் நடராசர் சன்னிதானம் எதிரே அமைந்துள்ளது.

ஃ இங்குள்ள சண்டிகேசுவரர் ஆலயம் ஒரே கல்லில் குடைந்து அமைக்கப் பெற்றது. அந்தக் கல்லை எடுத்து வந்த இடம் இன்றும் 'சண்டிகேசுவரர் மலைப்பள்ளம்' என அழைக்கப் பெறுகிறது.

ஃ வயிரவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் 27—4—1894 (ஜெயவூ சித்திரை மீ 16௨) 1904, 1928, 12-2-1959 (விளம்பி வூ தை மீ 30௨) 31—1—1982 (துன்மதி வூ தை மீ 18௨) ஆகிய நாட்களில் நடைபெற்றுள்ளன.

ஃ வயிரவன் கோயிலில் கோ பூஜை அதிகாலை 6.00 மணியளவிலும் திருவனந்தல் காலை 6-30 மணி அளவிலும் காலை சந்தி 8-30 மணியளவிலும், உச்சிக் காலம் பகல் 12 மணியளவிலும் சாயரட்சை மாலை 5.00 மணிக்கும் அர்த்த சாமம் இரவு 7-00 மணி அளவிலும் ஆக தினமும் 6 காலப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

ஃ வயிரவன் கோயிலில் 2-5-84 வரை உள்ள கணக்குப்படி 4474 நகரத்தார்கள் புள்ளிகள் உள்ளனர்.

ஃ தேவகோட்டை, காரைக்குடி ஆகிய இரண்டு செட்டிநாட்டு ஊர்களிலும் வயிரவன் கோயில் நகரத்தார் புள்ளிகள் அதிகமாக உள்ளனர். மிகக் குறைவான புள்ளிகளைக் கொண்ட ஊர் சிராவயல்.

ஃ கோட்டையூர், அமராவதிபுதூர் தாணிச்சாவூரணி, கல்லுப்பட்டி. பட்டமங்கலம், கீழப்பூங்குடி, கொல்லங்குடி அழகாபுரி, செவ்வூர், வேகுப்பட்டி, சோழபுரம், சக்கந்தி, ஆராவயல் ஆகிய 12 செட்டிநாட்டு ஊர்களில் வயிரவன் கோயில் நகரத்தார்கள் இல்லை.

ஃ வைரவருக்கு திருப்புத்தூர் சிர

Koviloor Digital Library

சுத்தானம் என்றும் வயிரவன் கோயில் இதய ஸ்தானம் என்றும் இலுப்பைக்குடி பாத ஸ்தானம் என்றும் கூறப்பெறுகிறது.



வயிரவ் சுவாமி

ஃ இங்கு 1980 க்கு முன்பு திரு விளக்குக் காணிக்கை என்று புள்ளி ஒன்றுக்கு ஆண்டு ஒன் றுக்கு 0-50 காசு வீதம் வசூலிக் கப்பெற்று வந்தது. 7—2—1980 முதல் திருமணம் ஆன ஒரு



ஒரே கல்லில் உருவாக்கப் பெற்ற கற் தூணும் குதிரை வீரன் சிலையும்

ஆணுக்கு மாலைக் காணிக்கையாக ரூ 16-00ம் ஆயுள் சந்தாவாக ரூ 1-00ம் வசூலிக்கப் பெற்று வருகிறது.

தொகுப்பு: "எல்லெஸ்"

படங்கள் :
கும. வள்ளியப்பன்
பலவான்குடி

மாணவர்களுக்கு உதவி!

திருப்புத்தூர் ஆறுமுகம் பிள்ளை, சீதை அம்மாள் கல்லூரியில் பயிலும் – தேவகோட்டை, காரைக்குடி, பொன். புதுப்பட்டி, நேமத்தான்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த வயிரவன் கோயில் மாணவர்கள் 5 பேருக்கு வயிரவன் கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் வயிரவன்பட்டியில் இலவசமாகச் சாப்பாடு, தங்கும் வசதி ஆகியவற்றை அளித்து வருகிறது. இது 1984 - கல்வி ஆண்டிலிருந்து வழங்கப்பெறுகிறது.

Koviloor Digital Library

கொழு கொழு குழந்தை !



பெயர் : சிவகாமி

வயது : 9 மாதங்கள்

தந்தையின் பெயர் :
மு. பழநியப்பன் B. Com.

தாயின் பெயர் :
பழ. அன்னபூரணி

சொந்த ஊர் : காரைக்குடி

படம் : குமு. வள்ளியப்பன்
பலவான்குடி



பெயர் : வைரவன் என்ற
செந்தில்

வயது : 15 மாதங்கள்

தந்தையின் பெயர் :
ஆர் எம். வி. இராமசாமி

தாயின் பெயர் :
ஆர் எம். அலமேலு


கோயில் : இரணிக்கோயில்

சொந்த ஊர் : கோட்டையூர்

மணி விழா

அரண்மனை சிறுவயல் கரு. உ. நடரார்சன் செட்டியார் அவர்களுக்கும் காந்திமதி என்ற லெட்சுமி ஆச்சி அவர்களுக்கும் 19–11–85 அன்று அரண்மனை சிறுவயலில் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது. மணி விழாவை ஒட்டி கவிஞர் திரு. மா. கண்ணப்பன், மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் பங்குபெற்ற வழக்காடு மன்றம் நடைபெற்றது. பொன். புதுப்பட்டி திரு அ. பெரி அடைக்கப்ப செட்டியார் மணி விழாத் தம்பதியருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வாசித்தளித்தார்.

Koviloor Digital Library



வங்கக் கடலின் நடுவே . . . .

ராம. லெ. நாச்சம்மை ஆச்சி, அலவாக்கோட்டை

சிலம்பாறு கொஞ்சிவரச் செந்தமிழும் மிஞ்சிவர
பழம்தூங்கும் சோலையிலே பாலகனே நீ நிலத்தில்
நலம் தூங்கும் நாயகனே வளம் தூங்கும்
மாமலையாய் வந்துதித்த பாலகனே
மீனாளின் மகனான மெஞ்ஞான சம்பந்தனாய்
வந்து வாதுகள் செய்துமே
வேதங்கள் போற்றிடக் கல்விக் கழகமே
கையில் பழமேந்தி கருத்தில் உனையேந்தி
மெய்யாகவே தந்த வேலவரே கண்வளராய்
சக்தியருள் தன்னோடு சங்கரனின் நெற்றியிலே
உக்கிரமாய் வந்துதித்த ஒருகோடி சூரியன்போல்
பக்தனாய் வந்துதித்த பாலகனும் நீதானே
மங்கை சிவகாமி மைந்தனாய் வந்துதித்து
கங்கை வளர்சடையோன் கண்மணியே கண்வளராய்
அங்கம் குழைந்துருகி அடிபரவும் அன்பரெனும்
வங்கக் கடல்நடுவே வந்துதித்த பாலகனே
ஆராரோ பாடிவர அஞ்சுகமே கண்வளராய்
நெஞ்சிற் கவலையெல்லாம் நீ தீர்க்க வந்தவனே
சீரார் தவப்புதல்வா செல்வமே கண்வளராய்
வங்காளம் கெங்கை மகர மீன் துள்ளுதிண்ணு
சிங்கார வில்லெடுத்துத் தெறிக்கப் பிறந்தகண்ணே

பெருமைக்குரிய ஆச்சிமார்களே ! உங்களது தாலாட்டுப் பாடல்களை, தாலாட்டுப் பகுதி '' நகரத்தார் குரல் '' 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு அனுப்பி உதவுங்கள் அது பலருக்கும் பயன்படட்டும்.

Koviloor Digital Library

சிவப்புக் கடதாசி...

பழ. மு. பழ. சுப. ராமாயி ஆச்சி, சிறுகூடல்பட்டி

தாளால் கடதாசி தங்கத்தால் மைக்கூடு
பேனுப் பிடித்தெழுதும் புண்ணியவார் பேரேனே
சிவப்புக் கடதாசி சிங்கப்பூர் மைக்கூடு
சேர்த்துக் கணக்கெழுதும் தெசகருணர் பேரேனே
மஞ்சள்க் கடதாசி மதருசு மைக்கூடு
மதிக்கக் கணக்கெழுதும் மகராஜர் பேரேனே
பச்சைக் கடதாசி பட்டிணத்து மைக்கூடு
பாங்காய்க் கணக்கெழுதும் பாண்டியனர் பேரேனே
உதிர்ந்த இலைபொறக்கி உன்னதமாய்த் தொன்னைவைத்து
வருந்தி விருந்து வைக்கும் மகாராஜா பேரேனே
தேடி விருந்து வைக்கும் தெசையுள்ளார் பேரேனே

கான மயிலே நீ கண் உறங்கு

திருமதி ராஜகுமாரி நாகப்பன் B. Sc.,
நாட்டரசன்கோட்டை

ஆராரோ ஆரிரேரோ ஆராரோ
யாரடித்தார் உன்னை, ஏன் அழுதாய் என்கண்ணே
என்ன கனி கேட்டழுதாய் ?
மரத்திலிருக்கும் மாங்கனியா கேட்டழுதாய்,
கொம்பிலிருக்கும் கொய்யாவா கேட்டழுதாய்.
பிடிச்சு விளையாடப் புள்ளிமானு கேட்டழுதாய்,
அணைத்து விளையாட அம்புலிமானு கேட்டழுதாய் !
என்கண்ணே நீ கண் உறங்கு
கானமயிலே நீ கண் உறங்கு
அத்தை அடித்தாளோ-உன்னை அமுதூட்டும் கையாலே
மாமி அடித்தாவோ—உன்னை மலர் சூட்டும் கையாலே
பாட்டி அடித்தாளோ—உன்னை பால்வார்க்கும் சங்காலே
தமையன் அடித்தானோ—உன்னைத் தயிர் ஊட்டும் கையாலே
அடித்தாரைச் சொல்லி அழு
ஆக்கினைகள் பல செய்திடுவோம்
என் கண்ணே! மணியே! கற்கண்டே!
நவரத்தினமே! பொன்னே! மணியே! பூவே!
நித்திரை செய் நீ நித்திரை செய்!!

திருமணம்

மதகுபட்டி கரு நாக. சுப. திருஞானம் அவர்களின் புதல்வி செல்வி தமிழ்ச்செல்வி என்ற கண்ணத்தாளுக்கும் கீழப்பூங்குடி கூ. லெ. நா.ராம, கருப்பன் செட்டியார் அவர்களின் சுவீகாரப் புத்திரன் செல்வன் மணிகண்டன் என்ற இராமசாமிக்கும் 15-12-85 அன்று மதகுபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

கவிஞர் திரு சோம. சிவப்பிரகாசமும் மக்கள் கவிஞர் திரு அரு. நாகப்பனும் பங்கு பெற 'சிக்கனம்' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. கவிஞர் திரு. மா. கண்ணப்பன் நடுவர் பொறுப்பேற்றார்.

Koviloor Digital Library

மணி விழா

தொழிலதிபர், நெற்குப்பை தி சனகசபைச் செட்டியார் அவர்களுக்கும் திருமதி மரகதம் ஆச்சி அவர்களுக்கும் 1–12-85 அன்று நெற்குப்பையில் 60–ஆம் ஆண்டு நிறைவு மணி விழா சிறப்பாக நடைபெற்றது.

மணிவிழாவை யொட்டி 30-11–85 அன்று மாலை முத்துப்பேட்டை P. A சண்முகசுந்தரம் குழுவினரின் நாதசுர இன்னிசையும் திருவாடானை திரு சி. சங்கரன் குழுவினரின் பாலர் கவியரங்கமும் நிகழ்ந்தன.

மணிவிழாவன்று காலையில் மத்தியத் துணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள், தமிழகச் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு உ. சுப்பிரமணியன். தொழிலதிபர்கள் திரு எல். நாராயணன் செட்டியார் திரு கருமுத்து தி. கண்ணன் டாக்டர் கேஎம். தியாகராஜன் தக்கார்கள் திரு வி. என். சிதம்பரம் செட்டியார்., திரு மு ப மு. ராம, சேதுராமன் செட்டியார் தொழிலதிபர் திரு கே. எல். என். கிருஷ்ணன், திரு எஸ் டி. காசிராஜன், கல்கண்டு ஆசிரியர் திரு லேனா தமிழ்வாணன், டாக்டர் சுப. அண்ணாமலை, டாக்டர் தமிழண்ணல் ஆகியோர் மணிவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். தொழிலதிபர் 'கலைமகள்' திரு இராம. நடராஜன் செட்டியார் நன்றி கூறினர்.

அன்று பகல் பின்னைமாநல்லூர் திரு கேஎம். தெட்சிணாமூர்த்தி, திரு கே. எம். உத்திராபதி குழுவினரின் நாதசுர இன்னிசையும் மாலை 4 மணிக்கு டாக்டர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் தலைமையில் கவியரங்கமும் நிகழ்ந்தன. முன்னதாக மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் தக்கார் திரு வி. என். சிதம்பரம் செட்டியார் தொடக்க உரை ஆற்றினர்.

மாலை 6 மணிக்கு டாக்டர் சரசுவதி இராமநாதன் 'மீனாட்சி கல்யாணம்' என்ற தலைப்பில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இரவு திரு கே. வீரமணி இராதா குழுவினரின் இன்னிசை கச்சேரியும் பஞ்சமூர்த்தி திருஉலாவும் நிகழ்ந்தன.

மணிவிழாவை யொட்டி மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. இம்மலரைத் தயாரிக்கும் பொறுப்பினை 'கலைமகள்' திரு இராம. நடராஜன் செட்டியார் ஏற்றுச் சிறப்புறச் செய்திருந்தார்.

பாஸ்போர்ட், விசா, கப்பல்-விமான டிக்கெட்டுகள், உள்நாடு, வெளிநாடு, சுற்றுலாக்களுக்கும், தங்கும் வசதி நான்கு வேளை ஆகாரம் முதலியவையுடன் பேருந்து சுற்றுலாவிற்கும் அணுக வேண்டுகிறோம். பள்ளி, கல்லூரி மற்றும் குருப்பாகச் செல்பவர்களுக்குச் சலுகையுடன் குறிப்பிடும் தேதியிலும் சிறப்பாக சுற்றுலா நடத்திக் கொடுக்கப்படும்.



சுபம் டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத் தெரு,

மதுரை-625 001.

தொலைபேசி எண்: 22712

Prop: சொ. சுப்பிரமணியம்

Koviloor Digital Library

திருச்சி நகரத்தார் சங்கத்தின் திருமண முயற்சிகள்

நம் சமூகத்தில் வசதிக் குறைவாக உள்ள குடும்பத்தினருக்குத் திருமண உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் திருச்சி நகரத்தார் சங்கத்தின் இத்திருமணத் திட்டம் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப் பெற்றது. அதுவரை நம் சமூகப் பிரமுகர்களும், அறப்பணிக் கழகங்களும் இதர சங்கங்களும் திருமணங்களுக்குப் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட தொகையை நிதி உதவியாக வழங்கி வந்தன. அதை மாற்றி திருச்சி நகரத்தார் சங்கத்திலேயே மேற்படித் திருமணங்களை நடத்தி வைப்பதென முடிவு எடுக்கப்பெற்று, அதன்படி முதல்த் திருமணம் 14-9-1972 அன்று நடைபெற்றது. இதற்கான முதல் முயற்சியில் ஈடுபட்ட பெருமை திருச்சி நகரத்தார் சங்கத்தின் அன்றைய தலைவர் ST. AR. அருணசலம் செட்டியார் அவர்களையே சாரும். தொடக்கத்தில் மணப்பெண்ணுக்கு 7 பவுன் நகை அளிக்கப்பெற்ற இத்திருமணத்தில் பின்னர் தங்கம் விலையேற்றத்தினுல் படிப்படியாக நகைகள் செய்வது குறைக்கப்பட்டு சுமார் முக்கால் அல்லது அரைப் பவுனில் தாலி மட்டும் கொடுப்பது என்ற நிலைக்கு வந்தது. ஆனல் இதர ஏற்பாடுகள்— அதாவது மாப்பிள்ளை-பெண்ணுக்கு வேஷ்டி, பட்டுப் புடவை வழங்குவது, இரு தரப்புக்கும் இருவேளை விருந்து அளித்து மற்ற திருமணச் செலவுகளை நமது வழக்கப்படி முறை தவருமல் நடத்துவது என்பதிலே எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை இதுபோல இதுவரை சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 24 திருமணங்கள் செய்து வைக்கப் பெற்றுள்ளன.

இந்தச் செலவுகளுக்கு சங்கத்தின் நிதியிலிருந்து எந்தத் தொகையும் எடுக்கப் பெறவில்லை. ஒரு திருமணம் நிச்சயமானவுடன் ST.AR. அருணசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் நிதி வசூல் தொடங்கப்படும். (ஒவ்வொரு திருமணத்திற்கும் தொடர்ந்து கணிசமான தொகைகளை நன்கொடையாக அளித்துவரும் நம் சமூகப் பிரமுகர்களையும் அன்பர்களையும் நாங்கள் இத்தருணத்தில் நன்றியுடன் நினைந்து வாழ்த்துகிருேம்.) இந்த நிதி திரட்டும் பணியில் தொடர்ந்து சலிக்காமல் பெரும் பங்கு ஏற்றுவரும் எங்கள் முன்னுள் தலைவர்கள் ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள், S. AR பழநியப்பச் செட்டியார் அவர்கள் ஆகியோரின் பணிகள் மறக்க முடியாதவை.

ஆனல் வரவர இத்தகைய திருமணங்களுக்கு விண்ணப்பங்கள் வருவது குறையத் தொடங்கிற்று. காரணம் மாப்பிள்ளை, பெண் வீட்டார் செலவு செய்து கொண்டு திருச்சி வர வேண்டிய சிரமம் ஒன்று. மற்றபடி கொடுக்கப்படும் நகையும் மிகக் குறைந்து தாலி மட்டும் என்ற நிலைக்கு வந்தது மற்றொன்று. தொடர்ந்து திருமணங்கள் செய்ய வேண்டுமானுல் அதற்கு மேல் வசூல் செய்து செலவு செய்வது என்பதில் எங்களுக்கு உள்ள சிரமம்.

இந்த நிலையில்தான் எங்களது 36-ஆவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நடைபெற்ற போது கூட்டுத் திருமணங்களை பிள்ளையார் பட்டியில் நடத்தலாமென்ற யோசனையை வெளியிட்டோம். அதை அடுத்து திருச்சியில் அனைத்து நகரத்தார் சங்கங்களின் கூட்

Koviloor Digital Library

டத்திற்கு ஏற்பாடு செய்து எல்லா சங்கங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பினோம். சுமார் 10 சங்கங்களின் பிரதிநிதிகள் வந்து மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து அடுத்ததை ஈரோடு நகரத்தார் சங்க அழைப்பின் பேரில் அங்கு ஏற்பாடு செய்தோம். அதற்கு எங்கள் கூட்டு வேண்டுகோளிலும், அழைப்பிலும் கையெழுத்திட்டுள்ள 15 நகரத்தார் சங்கப் பிரதிநிதிகளும் வந்திருந்து தங்கள் முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தருவதாக வாக்களித்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் இந்த ஆண்டு ஐப்பசி மாதத்தில் குறைந்தது 5 திருமணங்களையாவது பிள்ளையார்பட்டியில் நடத்துவது எனவும் அதற்குப் பெண்ணுக்கு 3 பவுனுக்கு தாலி உட்பட சங்கிலியும், மாப்பிள்ளை பெண்ணுக்கு வேஷ்டி புடவைகளும் தந்து, இதரத் திருமணச் செலவுகள் அனைத்தையும் செய்து, நம் இன வழக்கங்களுக்கு மாறுபடாமல் திருமணங்கள் நடத்தி வைக்கவும் முடிவெடுக்கப் பட்டது இம்மாதிரி நடத்தும் ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூ. 8000– வரை செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டது

இக் கூட்டத்தில் மேற்படி திருமணங்களுக்கு நிதி ஒரு பிரச்னையாக இருக்காது; திருமணங்களுக்கு மாப்பிள்ளை பெண் கிடைப்பது தான் சிரமம் என்று எண்ணினோம் ஆனால் ஐப்பசி மாதத்தில் 3 திருமணங்களுக்கு விண்ணப்பங்கள் எங்களை வந்தடைந்தன. அதற்குப் பின் நிதி திரட்டுவது என்பது கொஞ்சம் சிரமமாகப் போய்விட்டது. இருப்பினும் மிகுந்த முயற்சி மேற்கொண்டு நிதி நிலைமையை ஓரளவு சமாளித்து விட்டோம் இதற்கான முயற்சிகளில் எங்கள் சங்கத் துணைத் தலைவர் L. N. லெட்சுமணன் அவர்கள் உண்ணாமூவீஸ் திரு. SP அருணாசலம் அவர்கள் முன்னாள் தலைவர்கள் ஆவிச்சி செட்டியார் அவர்கள் S AR பழநியப்பச் செட்டியார் அவர்கள் திரு KR. கருப்பஞ் செட்டியார் ஆகியோர் பெரும்பங்கு ஏற்றுள்ளனர். இந்நிலையில் நான்காவது திருமணமாக நகரத்தார் சங்கங்களே முன்னின்று ஏற்பாடு செய்த திருமணம் ஒன்றும் நிச்சயமாயிற்று. அது சொ. புதூர் பழநியப்பன் என்ற மணமகனுக்கும், கண்டனூர் உமையாள் என்ற மணப் பெண்ணுக்கும் ஏற்பாடு செய்யப்பெற்ற திருமணம். இந்த ஏற்பாட்டுக்கு பேருதவி புரிந்தவர்கள் சொ. புதூர் நற்பணி மன்றத் தலைவர் சக்திமுத்தையா அவர்களும் திருச்சி நகரத்தார் சங்கச் செயற்குழு உறுப்பினர் KR. கருப்பஞ் செட்டி அவர்களும் ஆவார்கள். முன்னவர் மாப்பிள்ளை வீட்டாருக்கும், பின்னவர் பெண் வீட்டாருக்கும் பிரதிநிதிகளாக இருந்து இத்திருமணத்தைப் பேசி முடித்தார்கவ. அத்துடன் சொ. புதூர் நற்பணி மன்றத்தார் மூலமாக மணமக்கள் இருவருக்கும் அவர்கள் தொடர்புள்ள புலிமார்க் சீயக்காய்த் தூள் நிறுவனம் அல்லது இதர நிறுவனங்களில் வேலை கொடுப்பதாகவும் வசிக்க வீட்டு வசதியளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்கள் அவர்களின் சீரியபணி பாராட்டுக்குரியது.

கடந்த 21—11—85 அன்று பிள்ளையார்பட்டியில் சீரும் சிறப்புமாக நடைபெற்ற மேற்படி நான்கு கூட்டுத் திருமணங்களைப் பற்றி அனைவரும் அறிவார்கள். இந்தச் சீரிய பணியில் எங்களுக்கு உதவிய அனைத்து நகரத்தார் சங்கங்களின் ஒத்துழைப்பை நாங்கள் என்றும் மறவோம். குறிப்பாக திருச்சி நகரத்தார் சங்கத்தின் துணைத்தலைவர் L. N. லெக்ஷ்மணன் அவர்கள். செயலாளர் S. சண்முகம் அவர்கள் துணைச் செயலாளர் S,S. வைரவன் அவர்கள் பொருளாளர் KE

Koviloor Digital Library

மெய்யப்பன் அவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இரவு பகலென்று பாராமல் ஆற்றிய பணிகள் மிகவும் போற்றுதற்குரியவை

திருமணத்தையொட்டி நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் இத்திருமணங்களை தொடர்ந்து நடத்திவர வேண்டுமென்ற விருப்பத்தைப் பலரும் வெளியிட்டனர். அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்ட யோசனைகளில் ஒன்று, நம்மவர் நூறுபேர் இம்மாதிரித் திருமணம் ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபாய் வீதம் தருவதற்கு முன்வந்தால், ஒரு திருமணத்திற்கு ரூ. 10,000- வரை சேருமென்றும், அதை வைத்து எவ்வளவு திருமணமாலும் நடத்தி முடிக்கலரமெனவும் தெரிவிக்கப்பட்டது. இது மிக நல்ல யோசனையாகத் தெரிவதால் இம்மாதிரி ஒரு திருமணத்திற்கு ரூ. 100- வீதம் பெறுவதற்கு நம்மவர்களிடம் அணுகி, இம்முயற்சிக்கு ஆதரவு பெறலாமெனக் கருதுகிறோம்.

நிறைவாக ஒன்று கூற விரும்புகிறோம் நகரத்தார் சமூக வரலாற்றிலேயே இம்முயற்சி முதன்மையானது. இன்றைய நிலையிலே மிகவும் இன்றியமையாதது. அனைவருடைய ஆதரவும் தொடர்ந்து கிடைக்குமானல் நம் சமூகத்திலே தேங்கி நிற்கும் பெண்கள் திருமணங்கள் அனைத்தையும் முடித்து விடலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இத் திருமணங்கள் இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு பேருதவி புரிந்த பிள்ளையார்பட்டி கோவில் டிரஸ்டிகளுக்கும் நிர்வாகிகளுக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகிறோம்.

உ



ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்காவணி மூல வீதி,

மதுரை - 625 001.

போன்: 31168

மஹா சிவராத்திரி ஸ்பெஷல்

20 நாட்கள் கொண்ட காசி யாத்திரை

1–3–86 (மாசி மீ 17உ) முதல் 20 நாட்கள்

(காசி, கயா, ஹரித்துவார், ரிஷிகேஷ், கல்கத்தா, டெல்லி, பம்பாய், ஆக்ரா, மதுரா, அலகாபாத்)

ரயில் III டயர் ஸ்லீப்பர் கேரேஜ் மூலம் சென்று வர, இருவேளை சாப்பாடு, காலை டிபன் காபி, மாலை காபி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவுகள் உள்பட நபர் 1க்கு ரூ. 1750 -அட்வான்ஸ் ரூ. 350/- வீதம் செலுத்தி உடன்டிக்கட்டுகளை பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறோம். 2–3–86 சென்னை சென்ட்ரல் ரயில் நிலயத்திலிருந்து புறப்படுகிறது.

Koviloor Digital Library

முத்துராமனுக்கு விருது !

மதுரை ஸ்ரீ தனலெட்சுமி இரும்புத் தொழிற்சாலையின் பங்குதாரர் திரு D முத்துராமன் 1984 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் விருதினை (National Productivity Award) புதுடில்லி விஞ்ஞான பவனில் 1-11-85 அன்று நடைபெற்ற விழாவில் பாரதத் தலைமை அமைச்சர் மேதகு ராஜிவ்காந்தி



அவர்களிடமிருந்து பெற்றார். பலதரப்பட்ட தொழில்களுக்கு தேசிய அளவில் வழங்கப்பெற்ற 25 விருதுகளில் தமிழகத்திற்கு மட்டும் 7 விருதுகள் கிடைத்தன. அதில் சிறு தொழில் என்ற முறையில் கிடைத்த விருது இவருடையதாகும் அவருக்கு நமது பாராட்டுதல்கள்.

கல்வி, திருமண உதவி !

நம்மினத்தில் கல்வி நிதி உதவி தேவைப்படும் பிளஸ் 2 மற்றும் அதற்குமேல் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு 1986-87 ஆம் கல்வி ஆண்டுத் தொடக்கத்தில் நிதி உதவி அளிக்கப் பெறும் என்றும் தேவையானவர்கள் நேரிலோ அல்லது கீழ்க்காணும் முகவரிக்குக் கடிதம் மூலமாகவோ எழுதி விண்ணப்ப பாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

திருமண நிதிஉதவி தேவைப்படும் நம்மினப் பெண் வீட்டாருக்கு நிதி உதவியாக திருமணத்திற்கு ரூ. 3500- வீதம் ஆண்டு ஒன்றுக்கு 9 திருமணங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப் பெற்றுள்ளதாகவும் நிதி உதவி தேவைப் படுவோர் கீழ்க் காணும் முகவரியில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு விண்ணப்ப பாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் காரைக்குடி ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் செயலாளர் சுப சண்முகம் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:—

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம். 4 சிவன்கோவில் மேல வீதி, காரைக்குடி—623 001

திருமணம்

சண்முகநாதபுரம் (ஆருவயல்) பெ. சித லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் இல்லத்தில் 1—12—85 அன்று நடைபெற்ற செல்வி முத்துக்கருப்பி-செல்வன் சுப்பிரமணியன் B. E. திருமணத்திற்கு மத்திய அரசின் துணை அமைச்சர் மாண்புமிகு பி. சிதம்பரம் அவர்களும் தொழிலதிபர் எல். நாராயணன் செட்டியார் அவர்களும் தொழிலதிபர் பி. லெட்சுமணன் அவர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராஜன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

Koviloor Digital Library